Registered as a Newspaper. பக்கங்கள்: பத்து விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்காக**

புதிய விசேட குறுகிய கால கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன!

16.06.2006 - Batch 1 காலை, Batch 2 மாலை
17.06.2006 - Batch 3 காலை, Batch 4 மாலை
18.06.2006 - Batch 5 காலை, Batch 6 மாலை

பதிவுக் கட்டணம் இலவசம்!

CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 04 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 21 (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை இதழ் 260

## கடற்படைப்படகு விபத்து 3 கடற்படையினர் பலி!

கொழும்பு —

கொழும்பு - முகத்துவாரம் கடற் பகுதியில் கடற்படையினரின் நீருந்து விசைப்படகு ஒன்று அலையில் சிக்கி விபத்துக்குள்ளானதில் இரு கடற்படையினர் உயிரிழந்தனர். ஒருவர் காணாமற்போயுள்ளார்.

நேற்றுக்காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

வத்தளை - பமுனுகம கடற்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவத்தையடுத்து துறைமுக காவலில் ஈடுபட்டிருந்த கடற்படையின் நீருந்து விசைப்படகு கடற்படையினருடன் தேடுதலில் ஈடுபட்டது.

அப்போது கடல் அலையில் சிக்கி மூழ்கிய படகு கற்பாறைகளில் மோதி பின்புறம் பாரிய சேதமடைந்தது. இதிலிருந்த மூன்று கடற்படையினர் காயங்கள் எதுவுமின்றி மீட்கப்பட்டனர்.

மூவர் கடலில் மூழ்கிப்போயினர். இவர்களில் இருவரின் சடலங்கள் நேற்று பிற்பகல் மீட்கப்பட்டன. ஒருவரின் சடலம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவரும் உயிரிழந்திருக்கலாம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க நேரிடும்!

### அரசுக்கு புலிகள் கடும் எச்சரிக்கை

கிளிநொச்சி —

விமானப்படையினர் நடத்தும் குண்டுத்தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்க நேரிடும் என விடுதலைப் புலிகள் இலங்கை அரசுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நோர்வே அனுசரணையாளர்கள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மூலம் புலிகள் இந்த எச்சரிக்கையை அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில்-

இலங்கையிலுள்ள களநிலைமைகளைப் புரிந்துகொள்ளாமல் கெப்பிற்றிக்கொல்லாவ தாக்குதலில் விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டி சில நாடுகள் அறிக்கை வெளியிட்டுள்ளன. அந்தத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கெப்பிற்றிக்கொல்லாவ பயணிகளை விடுதலைப் புலிகள் தாக்கவில்லை என்றும் அந்தக் கிளைமோர் தாக்குதலுக்கும் எமக்கும் தொடர்பில்லை என்றும் தெரிவித்துள்ளோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பேசாலை கடலில் சமர்; 14 கடற்படையினர் பலி!

மன்னார் —

மன்னார் - பேசாலை கடற்பரப்பில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற கடும் மோதலில் 3 கடற்படைப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதுடன், 14 கடற்படையினர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 6.55 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது - கடற்புலிகளால் ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டன. பேசாலை கடற்பரப்பில் கடற்புலிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, கடற்படையின் 4 படகுகள் வழிமறித்து வலிந்து தாக்குதல் நடத்தின.

இதையடுத்து கடற்புலிகள் திருப்பித் தாக்கினர். இதில் கடற்டையின் 3 டிங்கி படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு படகு சேதமடைந்தது.

இந்தத் தாக்குதலில் 12 கடற்படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். புலிகள் தரப்பில் இரு போராளிகள் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தத் தாக்குதலின் போது பி.கே.எல்.எம்.ஜி 02, ரி - 56 ரக தானியங்கி துப்பாக்கிகள் 03, எம்.பி 5 ரக துப்பாக்கி, தொலைத்தொடர்பு (10 ஆம் பக்கம் பார்க்க)

## தேவாலயத்தினுள் வெறியாட்டம்

## பேசாலையில் ஐந்து மீனவர்கள்

### தேவாலயத்தினுள் வெறியாட்டம்

# கடற்படையின் தாக்குதலில் பெண் பலி! 45 பேர் காயம்!



மன்னார் —

மன்னார் வெற்றிநாயகி தேவாலயத்தில் தங்கியிருந்த மக்கள் மீது கடற்படையினர் கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒரு பெண் தலை சிதறி பலியானதுடன், 45 பேர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை பேசாலை கடற்பரப்பில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சண்டை நடந்துகொண்டிருந்தபோது - மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த கடற்படையினர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பேசாலையில் ஐந்து மீனவர்கள் கடற்படையினரால் படுகொலை!

மன்னார் —

மன்னார் - பேசாலை கடற்பரப்பில் மீன் பிடித்துவிட்டுத் திரும்பிய ஐந்து மீனவர்கள் நேற்றுக் காலை கடற்படையிரால் படுகொலை செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை 7 மணியளவில் பேசாலை கடற்பரப்பில் கடற்படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை- மீனவர்களை வழிமறித்து அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதால் நான்குபேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். மற்றொருவர் படகு ஒன்றில் எரிந்து, சிதைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதேவேளை, பேசாலையிலிருந்த 25 மீனவர்களின் வாடியும், வங்காலைபாட்டில் 15 மீனவர்களின் வாடியும் கடற்படையினரால் தீயிட்டு எரிக்கப்பட்டன.

கரையில் தீயிட்டு எரிக்கப்பட்ட படகுகள் கடலில் எரிந்தவாறு மிதந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரின் காட்டுமிராண்டித்தனமான செய்கையால் அச்சமடைந்த வங்காலைபாட்டு மக்கள் அருகிலுள்ள கரிசல் கிராமத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்பில் கடற்கண்ணிவெடி கண்டுபிடிப்பு

கொழும்பு —

நீர்கொழும்பு கடற்கரையில் நேற்றிரவு கடற்கண்ணிவெடியொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றிரவு 9.20 மணியளவில் மீட்கப்பட்ட இந்தக் கடற்கண்ணி வெடியை விமானப் படையின் வெடிபொருள் நிபுணர்கள் செயலிழக்கச் செய்ததாகத்தெரிய வருகிறது.

# வத்தளை கடற்பகுதியில் 5 சுழியோடிகள் கைது!

## துறைமுகத்தை தாக்க முயற்சியா?

கொழும்பு —

கொழும்புத் துறைமுகத்தை அல்லது கடற்படை இலக்கு ஒன்றைத் தாக்கும் நோக்குடன் படகு ஒன்றில் வந்த ஐந்துபேரை கைதுசெய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கொழும்புக்கு வடக்கே 16½ கிலோமீற்றர் தொல்லைவிலுள்ள வத்தளை - பமுனுகம கடற்கரையில் மூவர் நீந்திக் (10 ஆம் பக்கம் பார்க்க)



மீட்கப்பட்ட சுழியோடும் சாதனங்கள்

## வெடிபொருளுடன் படகு கற்பிட்டியில் சிக்கியது!

கொழும்பு —

கற்பிட்டி பகுதியில் வெடிபொருட்களுடன் படகு ஒன்றைக் கைப்பற்றியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை புத்தளம் கற்பிட்டிக் கடலில் சென்று கொண்டிருந்த படகு ஒன்று எரிபொருள் அற்ற நிலையில் கரையொதுங்கியது.

இதிலிருந்த ஒருவர் தான் பணம் தருவதாகவும் பெற்றோல் வாங்கித் தருமாறு (10 ஆம் பக்கம் பார்க்க)




# முதன்மைக்கு இது போதாது






ஜெல்சென்கிர்சென் —

ஐரோப்பிய வரிசையில் ஹொலண்ட் (நெதர்லாந்து, டச்) பலமானதொரு அணியாகும். ஆனால், பிரிவு C அப்படி வசதியாக ஹொலண்டுக்கு இல்லை. அங்கு சிலவேளைகளில் இம்முறை வரலாற்றைப் புரட்டிப்போடும் ஆர்ஜென்ரீனா இருக்கிறது.

சேர்பியா மொன்ரநிக்ரோவை 6-0 என்று வீழ்த்தியவர்கள் ஆர்ஜென்ரீனியர்கள். ஆனாலும், மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட் தன்னைக் குறைத்துக் கொள்ளத் தயாராக இல்லை. ஹொலண்டுக்கு எதிராக தங்கள் முழுத்திறமையையும் காட்டி விளையாடியவர்கள் அவர்கள்.

இருந்தும் ஆட்டம் தொடங்கி 23 ஆவது நிமிடத்தில் ஹொலண்டுக்குக் கிடைத்த FREE KICK சந்தர்ப்பத்தை றொபின் வான் பேர்ஸி மிக அருமையாக கோலாக மாற்றினார்.

அதைத் தொடர்ந்து அடுத்த நான்காவது நிமிடத்தில் வான் நிஸ்ரல்றோப் இருபத்தைந்து யார் தூரத்தில் இருந்து வேகமாக அடித்த அடி ஐவரிகோஸ்ட் வலைக்குள் சங்கமாகிவிட்டது. ஆட்டம் தொடங்கி அரை மணிக்குள் ஆட்டத்தின் நிலை 2-0 என்றவாறு ஹொலண்ட் முன்னிலையில்.



ஆனால், ஐவரிகோஸ்ட் வீரர்கள் ஆட்டத்தை விட்டுக் கொடுப்பதாக இல்லை. ஐவரிகோஸ்டின் முன்னணி வீரர் பக்காரி கோன், ஹொலண்டின் தடுப்பு வீரர்கள் இருவரையும் லாவகமாகத் தாண்டிச் சென்று வேகமாக உதைக்கவே பந்து காற்றைக் கிழித்துக் கொண்டு ஹொலண்டின் வலைக்குள் புகுந்து விட்டது.

இதன்பின்னர் இரண்டு அணிகளும் பரஸ்பரம் நெருக்கிக் கொண்டாலும் யாராலும் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ள முடியவில்லை. இறுதியாக ஹொலண்டின் வெற்றி என்பது அவர்களுக்கு இரண்டாம் சுற்றில் நிச்சயமானதொரு இடம் என்ற வகையில் சந்தோசமாக முடிந்துவிட்டது.

ஹொலண்ட் உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்துகொண்ட சந்தர்ப்பங்களில் முதல் இரண்டு ஆட்டங்களிலும் வென்றது இதுவே முதல் தடவை. மேலும், இரண்டாவது சுற்றுக்கு இவர்கள் தகுதி பெறுவது ஆறாவது தடவை.

ஹொலண்ட் 2 ஆம் சுற்றில் முதலாம் இடம் பெறவேண்டுமாயின் ஆர்ஜென்ரீனாவை தோற்கடிக்க வேண்டும். ஹொலண்டால் இது முடியுமா?

# அசையவில்லை அங்கோலா





பிராங்போர்ட் —

பிரிவு D க்குரிய மூன்றாவது ஆட்டம் மெக்சிக்கோ எதிர் ஆபிரிக்க நாடான அங்கோலாவுக்கு எதிராக அமைந்தது. முன்னதாக ஈரானை வென்ற மெக்சிக்கோ 3 புள்ளிகளுடனும், அங்கோலா - போர்த்துக்கல் நாட்டுடனான போட்டியில் தோல்வி கண்டு புள்ளிகள் இன்றியும் களமிறங்கின.

மெக்சிக்கோ தரவரிசையில் நான்காவது இடம் பெற்ற நாடு. அங்கோலா உலகக்கிண்ணப் போட்டிகளில் புது முகம். ஆனால், 0:0 என்று அங்கோலா ஆட்டத்தை சமனிலையாக்கியது வெற்றிக்குச் சமமாகக் கருதப்படுகிறது.

இதில் முக்கியமான பங்கு அங்கோலா கோல்காப்பு வீரர் ஜொஆரிக்காடோவுக்குச் சேரவேண்டும். அவரது சர்க்கஸ் வித்தைகள் மெக்சிக்கோவை ரொம்பவும் ஏமாற்றிவிட்டன.

இன்னொன்று இறுதி நேரத்தில் - 79 ஆவது நிமிடத்தில் அங்கோலா வீரர் மைதானத்தில் இருந்து மத்தியஸ்தரால் வெளியேற்றப்படவே பத்து வீரர்களுடன் பதினொரு நட்சத்திரங்





களைச் சமாளித்தமை.

வேறு சில அணிகளின் ஆட்டங்களில் அவதானிக்கப்பட்டது போலவே மெக்சிக்கோவின் ஆட்டத்திலும் கவனிக்கப்பட்ட குறைபாடு ஒன்று இருந்தது. ஒழுங்காகப் பந்தைக் கொண்டு சென்ற சந்தர்ப்பங்களிலும் அதனைக் கோலாக்கும் சாதுரியத்தை மட்டும் இழந்து நின்றார்கள்.

இதேபோல அங்கோலா பெற்ற ஒரு சில சந்தர்ப்பங்களையும் தவற விட்டார்கள். குறிப்பாக மிக வசதியாக வந்த FREE KICK உதை ஒன்றை அணித்தலைவர் அக்வா தவறவிட்டமையைக் குறிப்பிடலாம்.

இம்முறை புதிய அணிகள் எல்லாம் எதிர்பார்த்ததைவிடச் சிறப்பாகவே விளையாடிக் கொண்டிருக்கின்றன என்பது உண்மையாகவே இருக்கிறது. அதுவும் மேற்கு ஆபிரிக்க நாடான அங்கோலாவின் அரசியல் ஸ்திரம் பெரிதாக இருக்கிறது என்று கூறமுடியாது. இருந்தாலும் அந்த நாடு உதைபந்தாட்டத்தை உலகத் தரத்தில் வளர்த்து வைத்திருக்கிறது என்பது மட்டும் உண்மை.

இந்த ஆட்டத்தைச் சமனிலையாக்கியதன் மூலம் அங்கோலா முதன்முறையாக ஒரு புள்ளியைத் தட்டிக் கொண்டது.

D பிரிவின் இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெறப்போகும் அணிகள் இன்னும் தெளிவாகத் தெரியவரவில்லை. போர்த்துக்கல்-மெக்சிக்கோவுக்கு இடையிலான போட்டி அந்தத் தெளிவைக் கொண்டுவரும் என்று நம்பலாம்.

# ஆசியாவுக்கு பரிதாபம்






பிராங்போர்ட் —

பிராங்போர்டில் நேற்றுமாலை நடைபெற்ற D பிரிவு ஆட்டத்தில் கடைசி 16 நிமிடங்களுக்குள் டெக்கோ மற்றும் கிறிஸ்ரியானோ றொனால்டோ ஆகியோர் அடித்த அபார கோல்களால் போர்த்துக்கல் அணி வெற்றிபெற்றது.

48 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்த அரங்கில் நடந்த இந்தப் போட்டி



யில் ஆசியாவின் பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றான ஈரானை எதிர்த்து போர்த்துக்கல் மோதியது.

ஈரானின் பாதுகாப்பு வளையத்தை உடைத்துக்கொண்டு றொனால்டோ உட்புகுந்து 33 ஆவது நிமிடத்தில் 16 யார் தொலைவிலிருந்து அடித்த பந்து வலது கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது.


போர்த்துக்கல் அணி தொடர்ந்து நெருக்கடிகளைக் கொடுத்தபோதும் ஈரான் அணி சமாளித்து முதல் பாதியாட்டத்தை கோல் எதுவும் செல்லவிடாமல் காத்துக்கொண்டது.

ஆனால் இரண்டாவது பாதியாட்டத்தில் போர்த்துக்கல் விடாமல் போராடியது. 63ஆவது நிமிடத்தில் பிகோ கொண்டுவந்த பந்தை ஈரானின் பனால்டி பிரதேசத்துக்கு 5 மீற்றர் வெளியில் இருந்து டெக்கோ கோல் கம்பத்தை நோக்கி திருப்பினார். அவ்வேளை சக அணி வீரர்களின் உதவியில்லாமல் நின்ற ஈரானிய கோல் காப்பாளர் மிர்ஷாபூர் அந்தப் பந்து கோல் கம்பத்துக்குள் நுழைவதைப் பார்ப்பதைத் தவிர வேறெதையும் செய்யமுடியவில்லை.

இதையடுத்து ஈரானிய அணியின் பயிற்சியாளர் சிறிய மாற்றத்தைச் செய்தார். அதேவேளை, 78 ஆவது நிமிடத்தில் ஈரானிய அணித்தலைவர் கொல்மோஹமாடி பனால்டி பிரதேசத்துக்குள் தவறிழைத்ததால் போர்த்துக்கல் அணிக்கு பனால்டி வாய்ப்புக் கிடைத்தது.

அந்த வாய்ப்பை றொனால்டோ சரியாகப் பயன்படுத்திக்கொண்டு கோல் கம்பத்தின் இடதுபக்க மேல் மூலைக்குள் பந்தை அடித்து அணியின் கணக்கை இரண்டாக உயர்த்தினார்.

இந்தப் போட்டியில் 92ஆவது நிமிடத்தில் ஈரானுக்குக் கிடைத்த



கோல் வாய்ப்பு ஒன்றும் நழுவிப் போக 2:0 என்ற அடிப்படையில் தோல்விகாண நேரிட்டது.


இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக டெக்கோ தெரிவு செய்யப்பட்டார்.

# இன்றைய ஆட்டங்கள்

| | |
|---|---|
| ஜப்பான் - குரோஷியா F பிரிவு | (நூரம்பேர்க் 06.30) |
| பிரேசில் - அவுஸ்ரேலியா F பிரிவு | (மியூனிச் 09.30 ) |
| பிரான்ஸ் - தென்கொரியா G பிரிவு | (லீப்சிக் 9.30) |

# யுத்த நிறுத்தத்தின் எதிர்காலம் அரசாங்கத்திடமே தங்கியுள்ளது

## புலித்தேவன் தெரிவிப்பு



கொழும்பு—

இலங்கையில் போர்நிறுத்தத்தின் எதிர்காலமென்பது அரசாங்கத்தைப் பொறுத்தது என விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியுள்ளதாவது -

அரசாங்கத்தால் - தரையிலும், வானிலும் நடத்தப்பட்டிருக்கும் தாக்குதல் மீண்டும் யுத்தத்தைத் தொடங்கியுள்ளது என்பதையே காட்டுகிறது.

அரச படைகள் ஒரு மோசமான நிலையை உருவாக்கியுள்ளன.

அரசாங்கப் படைகள் எம்மீது போரைத் திணிக்க முயற்சிக்கின்றன. எதிர்கால போர் நிறுத்தமானது - அரசாங்கத்தைப் பொறுத்தது. தற்போதைய தாக்குதல் தொடர்பாக எமது தளபதிகள் ஆராய்ந்து வருகின்றனர். அரச படைகளுக்கு எதிராக பதில் தாக்குதல் தொடர்பாக எமது தளபதிகள் ஆராய்ந்து வருகின்றனர். அரச படைகளுக்கு எதிராகப் பதில் தாக்குதல் நடத்த அவர்கள் தயாராகிவருகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்டிருக்கும் இந்த தாக்குதல்கள் குறித்த சேத விபரங்கள் இன்னமும் மதிப்பிடப்படவில்லை..

கிளிநொச்சியிலுள்ள எமது சமாதான செயலக அலுவலகத்திலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளில் நடத்தப்பட்டுள்ள தாக்குதல்களைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் மதிப்பீடு செய்தனர் எனத் தெரிவித்தார்.

# கந்தளாயில் ஆயுதங்கள்!

கொழும்பு—

கந்தளாய் காட்டுப்பகுதியில் ஆயுதக் குவியலைக் கண்டு பிடித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரி - 56 ரக துப்பாக்கிகள் - 02, மகசீன்கள் - 04, தோட்டாக்கள் - 56, பற்றறிகள் - 12 மற்றும் வயர் தொகுதிகள் - 02 ஆகியவை 2 பொதிகளில் வைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பதிவாளர் சேவை தரம் II

# ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பம் கோரல்

கொழும்பு—

பதிவாளர் சேவை தரம் இரண்டுக்குப் புதிதாக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர்.

தற்போது நிலவும் வெற்றிடங்களில் 75 வீதமானவை போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் 25 வீதமான வெற்றிடங்கள் சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையிலும் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும். இதற்காக உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பான பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தவர்கள் அல்லது சட்டக்கல்லூரியின் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் வெளிவாரியாக விண்ணப்பிக்கலாம்.

# சாட்சியங்கள் இல்லாததால் விசாரணைகளுக்குத் தடை

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

கொழும்பு—

கெப்பிட்டிக்கொல்லாவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் தொடர்பாகத் தகுந்த சாட்சியங்கள் இன்மையால் விசாரணைகள் மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

கெப்பிட்டிக்கொல்லாவையில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் தொடர்பான சாட்சியங்கள் இல்லாத நிலையில் இந்தத் தாக்குதலை யார் செய்திருக்கிறார்கள் எனக் கண்டறிவது கடினமான விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மங்கள தலைமையிலான குழு பிரிட்டனுக்கு விஜயம்

கொழும்பு—

நோர்வேக்கான விஜயத்தை முடித்துக் கொண்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழு லண்டனுக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேக்கு சென்ற வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பேரியல் அஷ்ரப் மற்றும் ரிசாத் பதியுதீன் ஆகிய அமைச்சர்கள் அடங்கிய குழு - நோர்வே பிரதமர், நோர் வேயின் விஷேட சமாதான பிரதிநிதி, வர்த்தக சமூகத்தினர் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் கலந்துரையாடிய பின்னர் நேற்று முன்தினம் லண்டன் சென்றனர்.

லண்டன் சென்றுள்ள அமைச்சர் குழு நாளை வரை அங்கு தங்கியிருப்பார்கள் என்றும், அவர்கள் அங்கும் முக்கிய பிரமுகர்கள், வர்த்தகர்கள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளை ஒழிப்பது எப்படி? அரசுக்கு தெரியவில்லையாம்

## நோர்வேயில் மங்கள பேட்டி



கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழிப்பது எப்படி என்பதுதான் தமது கேள்வியாக உள்ளதென வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

நோர்வே செய்தி நிறுவனமான என்.டி.பிக்கு அவர் நேற்று முன்தினம் அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித் தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் அமைதிக்குத் தடையாக இருப்பது தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் அல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன். அவரை எப்படி அகற்றுவது என்பதுதான் எமது கேள்வி.

சர்வதேச சமூகமானது - அவரைக் குற்றம்சாட்டும் சூழ்நிலை உருவாகக் கூடும். அவருக்குச் சில ஆதரவாளர்கள் இருக்கலாம். ஆனால், தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்ல.

பெரும்பான்மைத் தமிழர்கள் எங்களுடன் இணைந்து அமைதியாக வாழவே விரும்புகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விமானத்தாக்குதலை ஆராய குழு அனுப்பப்பட்டுள்ளதாம்

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் குறித்து ஆராய்வதற்காகக் குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளதாகப் போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் விமானப்படையினரால் கடந்த இருதினங்களாக தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான முழுமையான சேத விபரங்கள் தெரியவரவில்லை.

சேதங்கள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்குமான குழுவே அனுப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இடர் நிவாரணக் குழுக்களை அமைக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு—

ஜனாதிபதியின் பணிப்பின் பெயரில் இடர் நிவாரணக் குழுக்கள் தேசிய மட்டத்தில் இருந்து மாவட்டம், பிரதேசம் மற்றும் கிராம அலுவலர் மட்டம்வரை அமைக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபம் அனைத்து பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்த இடர் நிவாரணக் குழுவில் தேசிய மட்டத்திலான இடர் நிவாரணக் குழுவில் அத்தியாவசிய அமைச்சுக்களின் செயலாளர்கள் உட்பட முக்கிய பதவிகளில் உள்ள அரசியல்வாதிகள் இடம் பெற்றுள்ளார்கள்.

இது தவிர்ந்த ஏனைய குழுக்களில் குறிப்பிட்ட மாவட்டத்துக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், எதிர்கட்சித் தலைவர்கள் உட்பட பிரதிநிதிகள் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பிரதேச சபையின் தலைவர், பிரதேச செயலாளர் ஆகியோர் இணைத்தலைவர்களாகவும் உதவிப் பிரதேச செயலாளர் செயலாளராகவும் கடமையாற்றுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதிலும் பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவரும் இடம் பெறுவதுடன் ஏனைய அத்தியாவசிய திணைக்களங்களின் தலைவர்களும் இடம் பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் மட்டத்திலான குழுவில் கிராம அலுவலருடன் சமுர்த்தி அலுவலர் மற்றும் கிராம மட்டத்திலான பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட குழுவானது -இயற்கையால் அல்லது மனிதர்களால் ஏற்படுத்தப்படும் இடர்களுக்கு முகம் கொடுத்து அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் செயற்படுவதற்காக அமைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்

# விமானப் படைத் தாக்குதல்களுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

கொழும்பு—

தமிழர் பகுதியில் படையினரால் நடத்தப்படும் வான் தாக்குதல்களை சர்வதேச மன்னிப்புச்சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருக்கும் மன்னிப்புச்சபை கெப்பிற்றி கொல்லாவ பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்கோடு அரசாங்கத்தால் நடத்தப்படும் நடவடிக்கைகள் பொது மக்களுக்கு ஆபத்தாக அமையலாம் என எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கண்மூடித்தனமாக வகை தொகையின்றி பொதுமக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக அமையும் தாக்குதல்கள் அனைத்துலக மனிதநேய சட்டங்களுக்கு முரணானது.

கடந்த ஏப்ரல் மாதம் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மீதான தாக்குதலின் பின்னர் அரசாங்கம் தொடுத்துள்ள வான் வெளித் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டு பல ஆயிரக்கணக்கானோர் இடப்பெயர்வுக்கு உள்ளாகியுள்ளனர்.

அத்துடன், நீண்ட நாட்களாக நடைபெறும் மென்தீவிர யுத்தம் எந்த நேரமும் முழு அளவிலான யுத்தமாக வெடித்து மனித உ ரிமை மீறல்கள் அதிகரிப்பதற்கு வழிகோலலாம் என்றும் சர்வதேசமன்னிப்புச்சபைகவலை வெளியிட்டுள்ளது.

# ஈழத்தமிழ் அகதிகளின் குறைகளை தமிழக அமைச்சர் குழு ஆராய்வு


கொழும்பு—

தமிழ்நாட்டிலுள்ள மண்டபம் அகதிகள் முகாமுக்குச் சென்ற தமிழ் நாடு அமைச்சர்கள் குழு அங்கு நிலைமைகளை ஆய்வு செய்தனர்.

அகதிகளின் நிலைமைகள் குறித்த அறிக்கையை தமிழ்நாடு அரசாங்கத்துக்கு அளிப்பதற்காக அமைச்சர்கள் சுப.தங்கவேலன், பெரியகருப்பன் ஆகியோர் அடங்கிய குழுவைத் தமிழ்நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி நியமித்திருந்தார்.

இதையடுத்து அமைச்சர்கள் இருவரும் மண்டபம் அகதிகள் முகாமுக்குச் சென்று ஈழத் தமிழ் அகதிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தனர்.


மேலும் அகதிகள் வரக்கூடும் என்பதால் மண்டபம் அகதிகள் முகாமில் கூடுதல் வசதிகள் செய்யவும் அமைச்சர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.



கொழும்பு துறைமுகப் பகுதியில் கடற்படையினரின் கண்காணிப்புத் தீவிரப் படுத்தப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். படம்:- ஏ.எவ்.பி.

# ஈழத் தமிழர் குறித்த தமது நிலையை தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டும்

## தொல்.திருமாவளவன் கோரிக்கை



சென்னை —

ஈழத்தமிழர்கள் தொடர்பாக தமிழக அரசு கொண்டிருக்கும் நிலைப் பாட்டை தெளிவுபடுத்த வேண்டு மென விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல்.திருமா வளவன் தெரிவித்தார்.

ஈழத்தமிழர்களின் பாதுகாப்பை வலியுறுத்தி தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நேற்று முன்தினம் மாலை மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்வின் நிறைவில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது -

நாடு தழுவிய அளவில் நடை பெறும் இந்த ஆர்ப்பாட்டங்கள் இரண்டு முக்கிய குறிக்கோள்களைக் கொண்டு நடத்தப்படுகிறது. ஈழத் தமிழ் மக்கள் மீது சிங்கள இராணுவம் நடத்திவரும் இராணுவ வெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்தவும், அங்குள்ள உண்மை நிலைமைகளைக் கண்டறிந்து வரவும், அனைத்துக் கட்சியைச் சேர்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஈழத்துக்குச் சென்று வரவேண்டும் என்பதும், ஈழத்தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியப் பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவரைச் சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்பதும் இந்தப் போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளாகும்.

இந்த நிலையில் தமிழக அரசு தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்திய அரசின் நிலைப் பாடே தமிழக அரசின் நிலைப்பாடு என்று கருத்துச் சொல்லி இருப்பது குழப்பத்தை உருவாக்கியிருக்கிறது. சிங்கள அரசுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்திய அரசு ஆதரவு அளித்து வருகிறது. தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டுவருகிறது.

சிங்கள இனவெறியாளர்களுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து வ்ரவேற்பு கொடுக்கிறது. சிங்கள இராணுவத்துக்கு ராடர் கருவி வழங்கி வருகிறது.

பலாலி விமானத் தளத்தை புதுப்பிக்க ஒப்புக்கொள்கிறது. இந்திய அரசின் இத்தகைய நிலைப்பாடுதான் தமிழக அரசின் நிலைப்பாடா? தமிழக முதல்வர் இதனைத் தெளிவுபடுத்த வேண்டும். ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக்காகச் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வம் மற்றும் ரவிக்குமார் ஆகியோர் உரையாற்றினார்கள்.

அகதிகள் பாதுகாப்பு தொடர்பாகவும் குரல் எழுப்பினர். தொடர்ந்து பேரவையில் எமது உறுப்பினர்கள் ஈழத்தமிழர்களுக்காக வாதாடி வருகின்றனர்.

சிங்கள இராணுவ வெறியாட்டத்தைக் கண்டித்து இந்திய அரசு சிங்கள சார்பு நடவடிக்கைகளை கைவிட்டு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி, எதிர்வரும் 8 ஆம் திகதி சென்னையில் விடுதலைச் சிறுத்தைகளின் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இத்தகைய போராட்டங்களின் ஊடாக நமது உணர்வுகளை வெளிப்படுத்துவோம். அனைவரும் அணி திரள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழகத்துக்கு மேலும் 49 அகதிகள்

கொழும்பு —

படையினரின் கெடுபிடிகளால் தமிழகம் சென்றுள்ள ஈழத் தமிழரின் எண்ணிக்கை மூவாயிரத்து நூற்று 78 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 49 பேர் தமிழகத்துக்குச் சென்றனர். இவர்கள் தமிழகப் பொலிஸாரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப் பட்டு பின்னர் மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

12 குடும்பங்களைச் சேர்ந்த 23 பெண்கள் உள்ளடங்கிய 49 பேரே தமிழகம் சென்ற ஈழத் தமிழர்கள் என்று தமிழகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த மக்களுடன் அண்மையில் தமிழகம் சென்ற ஈழத்தமிழர்களின் எண்ணிக்கை மூவாயிரத்து நூற்று 78 ஆகும் என்று தமிழகத் தகவல் தெரிவித்தது.

## மூதூரில் இடம்பெற்ற தாக்குதலை கண்காணிப்புக் குழுவினர் பார்வை

திருகோணமலை —

திருகோணமலை மூதூரில் முப்படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளான பகுதிகளைத் திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவர் உவே ஜோன்சன் பார்வையிட்டதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனையும் சந்தித்தார்.



இந்தச் சந்திப்பில் திருகோணமலையில் தமிழர் பிரதேசங்களில் மூர்க்கத்தனமாகப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை விரிவாக எடுத்துக்கூறியதுடன், சேதமடைந்த பகுதிகளையும் நேரடியாகவே சென்று எழிலன் காட்டினார்.

இங்கு கருத்து வெளியிட்ட திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு தமிழ் மக்கள் பிரதேசத்தில் அரச படைகள் நடத்திய வான் வெளி மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் வெளிப்படையாக, அப்பட்டமான ஒரு போர் நிறுத்த மீறலேயாகும்.

இந்தப் படுகொலையானது -அரசாங்கத்தால் திட்டமிட்டு நடத்தப்பட்டதொரு சதி என்றே கருத முடிகிறது. ஏனெனில், அரசாங்கமானது - தனது நலனுக்காகத் தனது மக்களையே கொல்லக்கூடிய கீழத் தரமான ஒரு அரசாங்கமே.

கடந்த கால வரலாறுகளில் அவர்களால் சொந்த நாட்டிலேயே 80 ஆயிரம் தமிழ் மக்களும் ஏன் 60 ஆயிரம் சிங்கள மக்களும் கொலை செய்யப்பட்ட வரலாறுகளை எவரும் மறந்து விடக்கூடாது.

அரசாங்கமே ஒரு தாக்குதல் நாடகத்தை நடத்தி விட்டு, எந்த நியாயத்தில் எமது பிரதேசத்தில் வெளிப்படையான ஒரு தாக்குதலை நடத்த முடியும்? இது ஒரு அப்பட்டமான போர் நிறுத்த மீறல் என்பதை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அறிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோண மலை மாவட்ட தலைவர் உவே ஜோன்சன் - இது குறித்து தாம் உரிய நடவடிக்கையை விரைவில் எடுப் போம் எனவும் தாம் இங்கு வந்து உண்மைநிலைகளை கண்டறிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


60 Day's ENGLISH COURSE இலவச ஆங்கில பாடநெறி

- இலகுவில் ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு சிறந்த ஒரு வழிகாட்டி English Language இன் தபால் மூலம் ஆங்கிலப் பாடநெறிகள்.
- Basic / Spoken English அடிப்படையில் இருந்தே கற்றுக் கொடுக்கப்படும். Diploma in English விரிவான தமிழ் விளக்கத்துடன் கூடிய பாடத்தொகுதி. எமது பாடநெறியில் இணைந்து கொள்ள வயதுக் கட்டுப்பாடு இல்லை. பாடசாலை மற்றும் தொழில் புரிவோர் என யாவருக்கும் (இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்) இணைந்து கொள்ள முடியும்.
- இலவச Dialog GSM தொலைபேசி இணைப்பு
- இலவச 30 days English புத்தகம் மற்றும்
- இலவச அழகிய கைக்கடிகாரம் ஒன்று, அடையாள அட்டை என்பன பாடநெறியில் இணையும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

இலவசம்

பாடநெறிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

[C/5396]

மேலதிக விபரங்களுக்கு 5/- ரூபா பெறுமதியான 3 முத்திரை அனுப்பிப் பெறவும்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O.BOX 83, KANDY. Tel: 0777-220002



UNIVERSITY of CAMBRIDGE,
ESOL Examination
English for Speakers of Other Languages

BRITISH COUNCIL, Sri Lanka.

ENGLISH COURSES

உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பரீட்சைகள்

- உலகத்தில் எப்பாகத்திலும் நல்லதோர் தொழிலைத் தேடிப் பெற்றுக்கொள்ள
- உலகத்தில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் மேற்படிப்பை மேற்கொள்ள வேண்டிய தகைமையைப் பெற
- திடீரென வெளிநாடு ஒன்றிற்குச் செல்ல, மொழித்தடையை நீக்க
- பூரணமான ஆங்கில அறிவைப்பெற

UNIVERSITY of CAMBRIDGE இன் பின்வரும் ஆங்கிலப் பாடநெறி ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள்.

CAMBRIDGE PRELIMINARY ENGLISH TEST (PET)

- BRITISH COLLEGE OF ENGLISH இல் வகுப்புக்கள் திங்கள் தொடக்கம் வியாழன் வரை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஐந்து மாதங்களுக்கு நடைபெறும்.
- **25.11.2006** இல் பரீட்சைகள் கொழும்பில் BRITISH COUNCIL இல் நடைபெறும்.

CAMBRIDGE FIRST CERTIFICATE IN ENGLISH (FCE).

- இது ஓர் மிகவும் உயர்ந்த ஆங்கிலப் பாடநெறி. உலகின் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள ஆங்கிலத் தகுதிக்கு IELTS ற்குப் பதிலாக FCE ஐ ஏற்றுக்கொள்கின்றன. எந்த நேரத்திலும் உங்கள் ஆங்கிலத் தேவையைப் பூர்த்திசெய்யும் தலை சிறந்த சான்றிதழ்.
- BRITISH COLLEGE OF ENGLISH இல் FCE வகுப்புக்கள், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும். வகுப்புக்களில் இப்போதே சேர்ந்து கொள்ளலாம். பரீட்சை December 12 இல் கொழும்பில் நடைபெறும். பரீட்சைகள் நடைபெற்று மூன்று மாதங்களில் சான்றிதழ் LONDON இல் இருந்து கிடைக்கப்பெறுவீர்கள்.
- Each examination covers the four main language skills : **Listening, Speaking, Reading and Writing. Speaking** பரீட்சையின் போது பரீட்சார்த்தி 30 நிமிடங்களுக்கு ஆங்கிலேயர்களுடன் சரளமாக ஆங்கிலத்தில் பேசவேண்டும்.

June மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ, பொறியியல், விவசாய, விஞ்ஞான, முகாமைத்துவம் போன்ற பாடநெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கிலமொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள், தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக்கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமமுமின்றி விரிவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள அரிய சந்தர்ப்பம்.

அநேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது கிளை நிறுவனத்தை 841, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில், (ST.John தேவாலயத்திற்கு முன்பாக) இதே தினத்தில் ஆரம்பிக்கின்றோம். தூர இடங்களில் இருப்பவர்கள் இலகுவாக பஸ்சில் வந்து சேரலாம்.

**புதிய வகுப்புக்கள் 05.07.2006 இல் ஆரம்பமாகின்றன.**

BRITISH COLLEGE OF ENGLISH
141, Adiyapatham Rd, Thirunelveli
T.P: 0779934783
841, Hospital Road, Jaffna.
[C/5406]



ராஜா யாழ்ப்பாணம்
பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த



பட்டியல்
(புதிய வெளியீடு)
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30



மனோகரா யாழ்ப்பாணம்
ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த
திருட்டு பயலே
காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30



நிறைஞ்சனாஸ் சங்கானை
சூரியா, அசின், பிரகாஷ்ராஜ் நடித்த
கஜினி
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# போர் நிறுத்தம் நடைமுறையில் இல்லை அரசாங்கம் இதனை நிருபித்துவிட்டது!

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ——

தமிழ் மக்கள் மீது அரச பயங்கர வாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இல்லை என்பதை அரசாங்கம் நிரூபித்து விட்டதென யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

புதிய ஜனாதிபதியாக மகிந்த பதவியேற்ற காலம் தொடக்கம் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் அரச படைகளாலும், அதனுடன் இணைந்து செயற்படும் துணை ஆயுதக் குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக சர்வதேச சமூகம் இலங்கை அரசு மீது தமது உதவிகளை நிறுத்துவோம் என அழுத்தம் கொடுத்து வருகிறது.

அத்துடன், சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட சர்வதேச மனித உரிமை அமைப்புகளை - அரசு மதிக்கத் தவறிவிட்டது.

மக்கள் மீதான படுகொலைக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தவில்லை என அரசு மீது குற்றம் சுமத்தி வருகிறது. மறுபுறம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வை வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை என்றும் தெளிவாக சர்வதேசத்துக்கு விளங்கிவிட்டது.

இதன் காரணமாக அரசின் மீது நம்பிக்கையீனமும், அரசுக்கு அபகீர்த்தியும் ஏற்பட்டுள்ளது. அதனை மூடி மறைக்கும் நோக்குடன் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீது மேலும் மேலும் பயங்கரவாதிகள் எனும் சாயத்தைப் பூசி - தனக்குச் சாதகமான நிலையை உருவாக்கும் நோக்குடன் படையினரும், புலனாய்வுத்துறை ஆயுதக் குழுக்களும் திட்டமிட்ட முறையில் செயற்படத் தொடங்கிவிட்டன.

இதன் உச்சக்கட்டமாகவே அப்பாவிச் சிங்கள மக்களை அரச படைகள் கொலைசெய்யத் துணிந்துவிட்டனர்.

அநுராதபுரம் - கெப்பிட்டிக் கொல்லாவ குண்டுவெடிப்பை நிகழ்த்தி, தமது பெரும்பான்மைச் சிங்கள மக்கள் 64 பேரைப் பலிகொண்டு 80 பேரை காயப்படுத்தி அந்தப் பழியை புலிகள் மீது அரசு போட்டுள்ளது. இதன் மூலம் சர்வதேச அரசியல் இலாபம் தேட அரசு முனைகிறது.

திருகோணமலை, அல்லைப்பிட்டி, நவிண்டில், புத்தூர், வங்காலை எனத் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டபோது கண்டும் காணாமல் இருந்த ஜனாதிபதி - உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்றமை அரசின் கபடத்தனத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

அத்துடன், மக்களைப் பொறுமை காக்குமாறு கூறிவிட்டு - தமிழ் மக்களின் குடியிருப்புகள் மீது அரச படைகள் பொறுமையிழந்து தாக்குதல்களை நடத்தத் தொடங்கிவிட்டனர்.

அதனையே அரச படைகள் சம்பூர், முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற இடங்களில் தமிழ் மக்கள் குடியிருப்புகள் மீதான தாக்குதல்களைக் காட்டி நிற்கின்றன. இதன் மூலம் அரசு வெளிப்படையாகவே போர் நிறுத்த ஒப்பந்தங்களிலிருந்து விலகி விட்டதையே நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கை அரசின் இவ்வாறான தான்தோன்றித்தனமான செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எனவே, அரசு இந்தப் பிழையான காட்டுமிராண்டித்தனங்களை நிறுத்தி இதய சுத்தியுடன் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்தர வேண்டும்.

இல்லையெனில் இலங்கைத் தீவை அழிவின் பாதையில் இருந்து மீட்க முடியாமல் போய்விடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். கெப்பிட்டிக்கொல்லாவ குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த சிங்களச் சகோதரர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : வா.தர்னியா
முகவரி : கேணியடி.

## வாழ்க வளமுடன்




## க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவருக்கு விசேட தொழிற்பயிற்சி திட்டம்

யாழ்ப்பாணம் ——

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி - வேலை வாய்ப்புகள் இல்லாத நிலையில் இருக்கும் இளைஞர்களுக்கு விசேட தொழில் பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றை கல்வி அமைச்சு ஆரம்பிக்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தொலைக்கல்வி நிறுவன மயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் ஓர் அங்கமாக இந்தத் தொழிற் பயிற்சித் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான பயிற்சி நெறியைப் பெற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

வேலையற்ற இளைஞர்களுக்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் 3 தொடக்கம் 9 மாதங்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

2004, 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 22 வயதுக்குட்பட்ட மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பயிற்சிக் காலத்தின்போது விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

## வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு கடனுதவி

யாழ்ப்பாணம் ——

யாழ். குடாநாட்டில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களின் குடும்ப வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் சமூக அபிவிருத்தி மன்றம் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதன்படி வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு கடனடிப்படையில் தையல் இயந்திரங்கள், நீர்இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள் போன்ற உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் - விவசாயிகள், விதவைகள், வயது வந்தும் திருமணம் ஆகாதோர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு இந்தக் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன், வறுமைக் கோட்டின் கீழுள்ள 26 குடும்பங்கள் சுயதொழிலில் ஈடுபடுவதற்கு தலா 8 ஆயிரம் ரூபா இலவசமாக வழங்கப்படவுள்ளது. இதில் நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் 16 குடும்பங்களும், உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் 10 குடும்பங்களும் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து கரவெட்டி, மந்துவில், பூலசிட்டி, தேவிபுரம் ஆகிய கிராமங்களில் 42 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா கடனடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் மீது இராணுவ கெடுபிடிகள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம் ——

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீது குடாநாட்டில் கடந்த சில நாட்களாகப் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

படையினர் - மாணவர்களை அச்சுறுத்தி வருகின்றமை வழமை . தற்போது கெடுபிடிகள் அதிகரித்து அச்சுறுத்தல் மேலும் அதிகரித்து வருகிறது.

கடந்த 12 ஆம் திகதி காலை 9 மணியளவில் கல்வியங்காட்டுச் சந்தியில் வைத்து விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவன் சிறிதரன் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

13 ஆம் திகதி பலாலி வீதியில் மாணவர்கள் தங்கிநின்று கல்வி கற்கும் வீட்டுக்குச்சென்ற நான்கு படையினர் தீவிர சோதனை செய்ததோடு அங்கிருந்த யோகராசா என்ற மாணவனை மிகவும் மோசமாகத் தாக்கிவிட்டு சுட முனைந்தபோது மாணவர் கூச்சலிட்டபோது அது தடுக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருவதால் வீடுகளில் தங்கியிருந்து கல்வி கற்கின்ற மாணவர்கள் அச்சமடைந்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சர்வதேச மன்னிப்பு சபை, அரச அதிபர், மனித உரிமை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மனித உரிமை செயலகம், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, ஆசிரியர் சங்கம் எனப் பலவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆன்மீக சொற்பொழிவு

மானிப்பாய் ——

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆசிரமத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து 'ஏன் பிறந்தோம்' என்னும் தலைப்பில் பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவன் சி.பாலமுரளி ஆன்மீக சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

இதனைத் தொடர்ந்த அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(100)

## கிராமிய வீதிகளை திருத்த உலக வங்கி நிதியுதவி

யாழ்ப்பாணம் ——

உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ். குடாநாட்டில் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட வீதிகள் தார் ஊற்றப்பட்டு புனரமைக்கப்படவுள்ளதாக நியாப் திட்டத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

குடாநாட்டிலுள்ள கிராமிய வீதிகள் அண்மைக் காலங்களாக தார் ஊற்றப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டன.

இந்த வீதிகளை மீளவும் புனரமைப்பு செய்யும்போது கிரவல் வீதிகளாக மாற்றப்படுகின்றன. எனவே, இந்த செயற்பாட்டை நிறுத்தி மீண்டும் அவற்றைத் தார் வீதிகளாகப் புனரமைப்புச் செய்யுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த வீதிகளைத் தார் வீதிகளாகப் புனரமைப்புச் செய்வதற்கு உலக வங்கி நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

எனவே இவ்வாறான வீதிகளின் மதிப்பீடுகள், வரைபடங்கள், அதற்கான ஆய்வறிக்கை என்பவற்றுடன் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக யாழ். செயலக பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு கடிதங்களை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவற்கட்டு பிரதேசத்தை சுற்றிவளைத்து தேடுதல்

மானிப்பாய் ——

மானிப்பாய் - சுதுமலை, சாவற்கட்டுப் பிரதேசம் நேற்று முன்தினம் அதிகாலையில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டது.

அதிகாலை 4 மணியளவில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டு இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

காலை 6 மணிக்கு முன்னர் வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினர் வீட்டில் உள்ளவர்களின் தேசிய அடையாள அட்டைகள் மற்றும் வீடுகளையும் பலத்த சோதனைக்கு உள்ளாக்கினர். இளைஞர்களிடம் பலத்த விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

## வலயக்கல்வி அதிகாரிகளுக்கு விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு

யாழ்ப்பாணம் ——

கல்வியமைச்சு வெளியிட்ட 2005/2006 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஆசிரியர்களின் பதவி உயர்வு நடவடிக்கைகளில் தொடர்புடைய வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட அனைத்து பிரதேச வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தமது வழமையான கடமை நேரம் தவிர்ந்த மேலதிகமாகக் கடமையாற்றும் நேரத்துக்கு மட்டுமே இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி ஆசிரிய சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்தல் மற்றும் பதவி உயர்வு நடவடிக்கைகள், போன்றவற்றை துரிதப்படுத்தும் நோக்குடன் இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு ஆவணமொன்றுக்கு 75 ரூபாவீதம் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

அத்துடன் மேலதிகமாகக் கடமையாற்றும் நேரத்துக்கு கல்வியமைச்சின் விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு தவிர்ந்த வேறு எந்த கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வருடாந்த திருநாள் திருப்பலி

மானிப்பாய் ——

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி இன்று காலை 7 மணிக்கு யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இந்தத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும், இறை ஆசீரும் இடம்பெறும் என ஆலய பங்குத் தந்தை அருட்திரு எஸ்.அன்ரனிப் பிள்ளை தெரிவித்தார்.

(100)

## பாலர் தோத்திரத்திரட்டு நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் ——

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் வெளியீடான பாலர் தோத்திரத் திரட்டு எனும் நூல் வெளியீட்டு விழா - இன்று காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டுக்கான ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும், வாழ்த்துரையை ஆறு.திருமுருகனும் நிகழ்த்துவர்.

சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை நூலை வெளியிட - முதற் பிரதியை வலம்புரி நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம் மற்றும் ஆசிரியர் இரா.செல்வடிவேல் ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

# சமாதான காலத்தின் அழிவுகள் வேதனை அளிப்பதாகவுள்ளது

## மன்னார் ஆயர் தெரிவிப்பு



மன்னார்—

கடும் யுத்த காலத்தில் நிகழ்ந்த மனித உயிர் அழிவுகள் தற்பொழுது நிலவும் சமாதான காலத்தில் கூட தொடர்வது கடும் வேதனை அழிப்ப தாகவுள்ளது என மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக் குரிய இராயப்பு ஜேசேப் ஆண்டகை தெரிவித்தார்.

தற்பொழுது வடக்கு - கிழக்கு பகுதிகளிலும், நாட்டின் ஏனைய பிர தேசங்களிலும் அப்பாவிப் பொதுமக் கள் படுகொலை செய்யப்படுகின்ற னர். இந்தக் கொலைகள் உடன், நிறுத்தப்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் நகரில் சமாதானத்தை வலியுறுத்தியும், அப்பாவிப் பொதுமக் கள் மீதான தாக்குதல்கள் மற்றும் படு கொலைகளை நிறுத்தக் கோரியும் மாபெரும் சமாதானப் பேரணி ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனி னும், கடந்த வியாழக்கிழமை இரவு பேசாலைப் பகுதியில் நிகழ்ந்த அசம் பாவிதங்களைத் தொடர்ந்து குறித்த சமாதானப் பேரணி நடைபெற வில்லை.

எனினும், மன்னார் புனித மரி யாள் ஆலய முன்றலில் நேற்றுமுன் தினம் காலை 9.30 மணியளவில் நடந்த பொதுமக்கள் ஒன்றுகூடல் நிகழ்வின் போது உரையாற்றிய மன் னார் மறைமாவட்ட ஆயர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பொதுமக்கள் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ்.எமிலியா னுஸ்பிள்ளை அடிகளார் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்வில் ஆயர் மேலும் தெரிவித்ததாவது -

அண்மையில் நடைபெற்ற ஜெனிவா பேச்சுவார்த்தையின் பின்பே வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் மீதான தாக்குதல் களையும் படுகொலைகளையும் நிறுத்துவதற்கு அரசாங்கமும், தமி ழீழ விடுதலைப் புலிகளும் நடவடி க்கை எடுக்க வேண்டும். அப்பாவி மனித உயிர்கள் தொடர்ந்து காவு கொள்ளப்படுவதை எந்த நியாய பூர்வ மான மனித சமுதாயமும் ஏற்றுக் கொள்ளாது.

கடந்த காலங்களில் ஆயுதம் ஏந் திய தரப்பினர்களுக்கு மத்தியில் நிகழ்ந்த அரசியல் படுகொலைகள் தற்பொழுது ஏதுமறியாத அப்பாவி மக்கள் பலியாகும் வண்ணம் வியா பித்துள்ளது. மேலும், ஸ்தம்பிதம் அடைந்துள்ள பேச்சுவார்த்தை சர்வ தேச சமூகத்தின் அனுசரணையுடன் மீண்டும் தொடரப்படல் வேண்டும். போர் நிறுத்த உடன்படிக்கையில் உள்ள அச்சங்கள் தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை நடை முறைப்படுத்துவதற்கு அரசும், விடுத லைப் புலிகளும் முயலவேண்டும்.

மன்னார் நகரில் பொதுமக்கள் மீதான வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன. பொதுமக்கள் மீதான கொலைகளின் உச்சக்கட்டமாக வங் காலையில் ஒரே குடும்பத்தைச் சேர் ந்த 4 பேர் மிலேச்சத்தனமாகப் படு கொலை செய்யப்பட்டனர்.

மேலும், அநுராதபுரம் கெப்பிட்டி கொல்லாவயில் ஏதும் அறியாத அப் பாவி பொதுமக்களும், சிறுவர், சிறுமி களும் குண்டு வெடிப்பில் பலியாகி யுள்ளனர். இது மிகவும் கண்டிக்கத் தக்க பாரதூரமான, துரதிஷ்டமான நிகழ்வாகும்.

மேலும் திருமலையிலும், பொல நறுவயிலும் நிகழ்ந்த சம்பவங்களில் அப்பாவி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் படுகொலைகளும் கண் டிக்க வேண்டியது என மன்னார் ஆயர் தனதுரையில் மேலும் தெரி வித்தார். (மோ)

## நாகர்கோவில் களமுனையில் இரத்தினபுரம் மக்கள்!

கிளிநொச்சி—

வடபோர் முனை நாகர்கோவில் காப்பரணில் நிற்கும் போராளிகளை கிளிநொச்சி இரத்தினபுரத்தைச் சேர் ந்த பொதுமக்கள் சந்தித்து அவர்க ளோடு கலந்துரையாடிக் களமுனை விடயங்களைக் கேட்டறிந்து கொண் டனர். இந்தச் சந்திப்பு நேற்று முன்தி னம் நடைபெற்றது.

நாகர்கோவில் தளபதிகளில் ஒரு வரான அமுதாப் மற்றும் போராளி களும், இரத்தினபுர மக்களை வர வேற்று, உபசரித்து, உரையாடி தற் போதைய நிலைமை தொடர்பாக விளக்கம் அளித்தனர்.

கள நிலைமைகளை நேரில் கண்டதோடு, தேவையான விபரங் களையும் கேட்டறிந்து கொண்ட மக்கள் - கொண்டு சென்ற உலர் உணவுப் பொருட்களையும், ஏனைய உணவுப் பொருட்களையும் போராளி களிடம் வழங்கினர். (09)

## தீக்காயம்!

வட்டக்கச்சி—

வயோதிப மாது ஒருவர் தீக்கா யங்களுக்குள்ளான நிலையில் கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள் ளார்.

புலோப்பளை பளையைச் சேர் ந்த நல்லம்மா (வயது 67) என்ற மாதுவே நேற்று எரிகாயங்களுக் குள்ளான நிலையில் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவராவார். (09)

## பேசாலையில் பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் வீடுகள் சேதம்!

மன்னார்—

மன்னார் - பேசாலையில் பொலி ஸார்மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட பதில்தாக்குதலில் ஆறு வீடுகள் சேதமடைந்தன.

பேசாலை பொலிஸ் நிலையத் தின் முன்னரங்க காவலரண் மீது கடந்த வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலின் பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு அண்மை யில் இருந்த குடியிருப்புகளை நோக்கி பொலிஸார் துப்பாக்கி மற்றும் குண் டுத்தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் பொது மக்களின் ஐந்து வீடுகளும், வர்த்தக நிலையம் ஒன்றும் கடும் சேதம டைந்தன.

இந்தப் பகுதியில் இருந்து ஏற்க னவே மக்கள் இடம்பெயர்ந்தமை யால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற் படவில்லை என்றும், தாக்குதல் நடைபெற்ற குடியிருப்புக்கு அண்மை யில் இருந்த மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறி புனித வெற்றிநாயகி தேவாலயத்தில் தஞ்ச மடைந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன.

(மோ) (201)

## உஆம் கட்ட வீடமைப்பு பயனாளிகள் தெரிவு!

வட்டக்கச்சி—

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்புத் திட் டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட் டத்தில் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் சி.சிவ ஜெயந்தன் தெரிவித்தார்.

இதன்படி முதற்கட்டமாக கரைத் துறைப்பற்று பிரதேச செயலர் பிரி வில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளி களுக்கான கூட்டங்கள் முடிவடைந் துள்ளன.

பயனாளிகள் தெரிவு செய்யப் படும் போது அவர்களின் அடிப்படை வசதிகள், வருமானம் போன்ற அடிப் படை விடயங்கள் குறித்து ஆராயப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

(09)

## அரசாங்கத்தின் சிமெந்து தடையால் வைத்தியசாலை கட்டுமானம் பாதிப்பு

### முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி

வட்டக்கச்சி—

அரசின் சிமெந்துத் தடையால் முல்லை மாவட்டத்தில் மருத்துவம் சார் கட்டுமானச் செயற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதிமாகாண சுகாதார வைத்திய அதிகாரி கவலை வெளி யிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக் கட்டட வேலைத் திட்டங்கள் இந்த மாதம் முடிவடைய வேண்டும். ஆனால், சிமெந்து இல் லாததால் தாமதமடையும் நிலை ஏற் பட்டுள்ளது.

இதைவிட முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைப் புனரமைப்புத்திட் டங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவற்றோடு மாவட்டத்தில் அமைக் கப்பட்டு வரும் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களின் வேலைத்திட்டங் களும் தடைப்பட்டுள்ளன. இதனோடு தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடும் சுகாதாரம் சார் பணி களைப் பெருமளவில் பாதிப்பதாக அமைநதுள்ளது. வெளிக்கள உத்தி யோகத்தர்கள் தமது பணிகளைச் செய்ய முடியாதுள்ளனர்.

அத்தோடு முக்கியமான மருத்து வம்சார் போக்குவரத்துக்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவித்தார். (09)

## அரச அலுவலர்களுக்கான ஐந்துநாள் கணினிப் பயிற்சி

வட்டக்கச்சி—

வடக்கு - கிழக்கு மாகாண முகா மைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணை யுடன் கார்ப் திட்டத்தின் கீழ், கிளி நொச்சி மாவட்ட அரச அலுவலர்களுக் கான ஐந்து நாள்கள் தொடர் கணி னிப் பயிற்சிநெறி அண்மையில் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களின் பிராந்திய ஆணை யாளர் இ.ஐயாத்துரை தலைமையில் கிளிநொச்சியில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் இந்தப் பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இந்தப் பயிற்சியை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பளை, பூநகரி ஆகிய பிர தேச செயலகங்களைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், திட்ட அலுவலர்கள் ஆகியோர் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டச் செஞ்சிலு வைச் சங்க செயலர் கே.கணேஷ், நிறைவேற்று அலுவலர் அன்ரனி ராஜா, கணினிக் கற்கைநெறி விரி வுரையாளர் ஜெகதீஸ்வரன் ஆகி யோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(09)

## கிளிநொச்சி வைத்தியசாலை மேம்பாட்டு பேரவைக் கூட்டம்

வட்டக்கச்சி—

கிளிநொச்சி பொது வைத்திய சாலை மேம்பாட்டுப் பேரவையின ரின் அவசர கலந்துரையாடல் எதிர் வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு கிளிநொச்சி பொது வைத் தியசாலையின் புதிய கட்டட மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மேம் பாட்டுப் பேரவை நிர்வாக அங்கத் தவர்களையும் மற்றும் கிளிநொச்சி நகர், கனகபுரம், ஆனந்தபுரம், இரத் தினபுரம், கிருஸ்ணபுரம், விவேகா னந்தநகர், பொன்நகர், பாரதிபுரம், விநாயகர்புரம், கனகாம்பிகைக் குளம், திருவையாறு, மருதநகர், உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு, திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, ஜெயந்திநகர், கணேசபுரம், செல்வாநகர், புதுமுறிப்பு, உருத்திர புரம், பரந்தன் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்கள், செயலா ளர்களைத் தவறாது கலந்துகொள் ளுமாறு கிளிநொச்சி பொது வைத்தி யசாலை மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வைத்திய கலாநிதி இ. சதானந்தன் வேண்டுகோள் விடுத் தார். (09)

## நுண்கலைக் கல்லூரி சிறுவர்களின் நாடக பட்டறை நிறைவு நிகழ்வு!

கிளிநொச்சி—

புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி சிறுவர்களின் நாடகப் பட் டறை நிறைவு விழாவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த வியாழக் கிழமை புதுக்குடியிருப்பு உதவி அர சாங்க அதிபர் பணிமனைக் கேட் போர் கூடத்தில் புதுக்குடியிருப்பு நுண் கலைக் கல்லூரி பொறுப்பாளர் க.சாம் பவி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் அம்பி, தமி ழீழ தேசியக் கொடியை அரசியற் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், ஈகச்சுடரை தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சை ஆகியோர் ஏற்றினர்.

மாவீரர் படத்துக்கான மலர் மாலையை மூத்த நாடகக் கலைஞர் நல்லை சுந்தர் அணிவித்தார். சிறு வர்களின் அரங்க நிகழ்வைத் தொடர் ந்து, பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் களை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதேச உதவி அரசாங்க அதிபர் உட்பட பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## 2 லெப். மாலதி பயிற்சி பாசறையில் இரண்டாம் கட்டப் பயிற்சி நிறைவு

வட்டக்கச்சி—

மாயவனூர் பிரதேச மக்களுக் கான இரண்டாம் லெப்.மாலதி மக்கள் கட்டுமானப் பயிற்சியின் இரண்டா வது அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு - கடந்த புதன்கிழமை மாலை 5 மணியளவில் மாயவனூர் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

முன்பள்ளி ஆசிரியர் றஜிதா தலைமையில் ஆரம்பமான நிகழ் வில் - பொதுச்சுடரை மாயவனூர் பிர தேச கிராம சேவையாளர் ரூபசிங்கம் ஏற்றிவைக்க, தேசியக் கொடியை பயிற்சி ஆசிரியர் கலைப்புயல் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து, இரண்டாம் லெப். மாலதியின் திருவுருவப்படத்துக்கு ஈகச்சுடரை பயிற்சி ஆசிரியர் கமலா ஏற்றிவைத்தார்.

நிகழ்வில் - கருத்துரைகளைப் பிரதேச பொறுப்பாளர் சுரேன், மாய வனூர் கிராம அலுவலர் ரூபசிங்கம், தூயவன் அரசறிவியற் கல்லூரி முதல்வர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர். (09)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

- திருக்குறள்.

## நமது நோக்கு

# திறக்கப்படும் யுத்தவாசல்!

கிளிநொச்சியிலும் ஏனைய பகுதிகளிலும் விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளதன் மூலம் அரசாங்கம் போரை ஆரம்பித்திருக்கிறது.

இந்த நிலையில், போர்நிறுத்தம் தொடர்வதா என்பதை அரசாங்கம்தான் முடிவு செய்ய வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்திருக்கிறார்.

அடுத்தடுத்து இரண்டு நாட்கள் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்கள் போர்ப் பிரகடனத்தையே வெளிப்படுத்துவதாக இருந்ததென்பதை எவரும் மறுக்க முடியாது.

ஏனெனில், மறைமுகத் தாக்குதல்களில் ஈடுபட்டுவந்த அரச தரப்பு அந்தத் தாக்குதல்களுக்குத் தாம் காரணம் அல்ல என்று மறுத்து வந்தது. ஆனால், இப்போது புலிகளின் நிலைகள் மீது வரையறுக்கப்பட்ட விமானத் தாக்குதல்களை நடத்துவதாக வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறது.

போர்நிறுத்த காலத்தில் தற்காப்புக்காக தாக்குதல் நடத்துவதென்பது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருந்தாலும் -

புலிகளின் இலக்குகள் மீது வரையறுக்கப்பட்ட தாக்குதல்கள் நடத்தப்படுவதாக அறிவிக்கப்படுவது போர்நிறுத்த உடன்பாட்டுக்கு ஏற்புடையதல்ல.

விமானத் தாக்குதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அரசாங்கம் கூறுகிறது. இது போர்நிறுத்த உடன்பாட்டுக்கு முற்றிலும் முரணான செயல் என்பதில் சந்தேகம் இல்லை.

போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இருக்கின்ற போதே - தாம் மீளவும் போருக்குச் செல்லப் போவதில்லை என்று அரசு கூறிக்கொண்டே விமானத் தாக்குதல்களை நடத்துவதென்றால், இதை விடக் கேலிக்கூத்து வேறெதுவுமாக இருக்க முடியாது.

இதனால்தான் புலிகள் போர்நிறுத்தம் தொடர்வது அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது என்று தெரிவித்திருக்கின்றனர்.

அரசு வரையறுக்கப்பட்ட தாக்குதல்களை நடத்துவதற்கு எந்த வகையிலும் போர் நிறுத்த உடன்பாடு இடமளிக்கவில்லை.

ஆனால், அரசு இத்தகைய தாக்குதல்களை இப்போது மூன்றாவது தடவையாக நடத்தியிருக்கிறது. ஆனால், இதை சர்வதேசம் கண்டுகொள்ளவோ, தட்டிக்கேட்கவோஇல்லை.

எனவே, போர்நிறுத்த உடன்பாட்டை முறித்துக் கொண்டு அரசு போரைத் தொடர விரும்புகிறதா என்ற கேள்வி எழுகிறது.

அதேவேளை, அரசு கூறுவதுபோல் புலிகளின் இலக்குகள் மீதான வரையறுக்கப்பட்ட தாக்குதல்கள் தொடரும் என்றால் -

புலிகளும் அதே கோணத்தில் வரையறுக்கப்பட்ட தாக்குதல்களை நடத்தப்போவதாக அறிவித்தால் என்ன நடக்கும்? சில வேளைகளில் புலிகள் இப்படியொரு அறிவிப்பை வெளியிட்டால் உடனே சர்வதேசம் ஓடிவந்து அவர்களைக் குற்றம்சாட்டக் கூடும்.

அரசாங்கம் எப்படியாவது போரைத் தொடங்குவது என்ற விடயத்தில் கங்கணம் கட்டிநிற்பது தெளிவாகவே தெரிகிறது.

இதனால்தான் ஒரு போர்ப் பிரகடனத்தை - வரையறுக்கப்பட்ட தாக்குதல் என்ற தொனிப் பொருளில் ஆரம்பித்திருக்கிறது.

வரையறுக்கப்பட்ட விமானத்தாக்குதல் எந்தளவுக்குத் தொடரும் என்பதில் எந்த வரையறையும் கிடையாது. எனவே, இது வரையறையற்ற போர் ஒன்றுக்குள் செல்வதற்கான முன்னோடித் தாக்குதலாகவே எடுத்துக் கொள்ளலாம்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



# கெப்பிற்றிக்கொல்லாவ தாக்குதல்; பேரழிவுக்கான ஆபத்து சமிக்ஞை!

## நோர்வே தெரிவிப்பு

கொழும்பு —

அநுராதபுரம் கெப்பிற்றிக்கொல்லாவப் பிரதேசத்தில் பயணிகள் பஸ்வண்டி மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் சம்பவம் பேரழிவொன்றுக்கான ஆபத்தான சமிக்ஞையாகும். அப்பாவிப் பொதுமக்களைப் பலிகொண்ட இந்தச் சம்பவத்தை நோர்வே அரசாங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக நோர்வே தூதரகப் பேச்சாளர் எரிக்நேன்ஸ் பேர்க் தெரிவித்தார். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பரிதாபமாகப் பலியான பொதுமக்களின் குடும்பத்துக்கு நோர்வே அரசாங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

போர்நிறுத்த ஒப்பந்தம் கடைப்பிடிக்கப்படும் நிலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம், பாரிய போர்நிறுத்த மீறலாகும். சாதாரண அப்பாவிப் பொதுமக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவம் எம்மை ஆழ்ந்த கவலைக்கும், அதிருப்திக்கும், விரக்திக்கும் இட்டுச் சென்றுள்ளது.

எமது சகல கூட்டங்களிலும், மாநாடுகளிலும் அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் வன்முறைகளைக் கைவிட்டு பேச்சுக்குத் திரும்புமாறு அண்மைக்காலமாக நாம் தொடர்ச்சியான கோரிக்கைகளை முன்வைப்பதுடன் அதற்கான அழுத்தங்களையும் கொடுத்து வருகிறோம். ஆனால், இந்தத் தாக்குதல் சம்பவம் தற்போதைய நிலை யைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தான சமிக்ஞையாகும். பேரழிவுக்கான தொடக்க கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாகவே நாம் கருதவேண்டியுள்ளது.

நாம் மிக நீண்ட நாட்களாக தொடர்ந்து வலியுறுத்தி வருவதையே இப்போதும் வலியுறுத்துகிறோம். வன்முறைப் பாதையை மூடிவிட்டு சமாதான மேசையை நோக்கி மீண் டும் வாருங்கள். வன்முறைகளும், தாக்குதல்களும், பாரிய யுத்தமொன்றுக்கு இட்டுச் செல்வதோடு, இத்தகைய சம்பவங்களால் கொடிய பாதிப்புகளுக்கு உள்ளாகுவோர் சாதாரண அப்பாவிப் பொதுமக்களே என்பதைப் பொறுப்புமிக்கவர்கள் என்ற வகையில் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# கைது செய்யப்பட்ட மேஜருக்கு கொலை அச்சுறுத்தல் விடுப்பு

கொழும்பு —

போதைப்பொருளைக் கடத்தியதாக மன்னார் முருங்கனில் கைது செய்யப்பட்ட இராணுவ மேஜருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவ மேஜர் உபுல் செனிவிரட்ணவை கைதுசெய்த பின்னர் முருங்கன் பொலிஸார் மற்றும் கொழும்பு போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் பலரிடம் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக கொழும்பு போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரி ரி.எம்.சுகதாச கூறியதாவது -

மன்னார் இராணுவ முகாமிலிருந்து பேசாலை செல்வதற்காக உபுல் செனிவிரட்ண வாகனம் ஒன்றைக் கோரியிருந்தார். இராணுவத்திடமிருந்து மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொண்டு, முருங்கன் ஆலயம் ஒன்றுக்கு அருகாமையில் சந்தேக நபர்களிடம் போதைப் பொருட்களைப் பெற்றுள்ளார். அதன் பின்னர் தனது சீருடைகளை கல்லடி இராணுவ முகாமில் மாற்றிவிட்டு, கொழும்பு பஸ் மூலம் பயணித்தபோது கைதுசெய்யப்பட்டார். பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த சஞ்சீவ என்பவருக்காக இந்தப் போதைப் பொருளைக் கடத்தியதாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார். இராணுவ மேஜர் கைது செய்யப்பட்ட பின்னர், சஞ்சீவ தலைமறைவாகிவிட்டார் எனத் தெரிவித்தார்.

# அப்பாவி தமிழ் மக்களுக்கு தீங்கை ஏற்படுத்த வேண்டாம்

## தேசிய பிக்குகள் முன்னணித் தலைவர்

கொழும்பு —

அப்பாவித் தமிழ் மக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம் என தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் கலாநிதி தம்பர அமிலதேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

சிங்கள மக்களைப் போன்றே தமிழ்மக்களும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பெரும்சிரமப்படுகின்றனர்.

தமிழ் மக்களால் தாய்நாட்டுக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை. அவர்களுக்கு எந்தவித இன்னல்களையும் விளைவிக்க வேண்டாம் என நாட்டின் மீது அக்கறை கொண்ட அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக் கொள்கிறேன்.

எந்த ஒரு சந்தர்ப்பத்தின் போதும் தமிழ் மக்கள் மீது எத்தகைய அசம்பாவிதங்களையும் மேற்கொள்ளக்கூடாது என நாட்டை நேசிப்பவர்களிடம் வேண்டிக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊடக வளங்கள் பயிற்சி மையம் யாருக்காக?

## வாசகர் நோக்கு

யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களின் தொழில் திறன்களை விருத்தி செய்யும் நோக்குடன் ஊடகவளங்கள் பயிற்சிமையமொன்று டென்மார்க் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டென்மார்க் அரசாங்கம் இதற்கென சுமார் மூன்று கோடி பத்து லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிலையத்தின் மூலம் குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் எத்தனை பேர் பயன் பெற்றனர் என்பது ஆராய்ச்சிக்குரியது. ஊடகவளங்கள் பயிற்சி மையம் ஆரம்பிக்கப்பட்டபோது தமிழ் நாட்டிலிருந்து இதழியல் துறையில கலாநிதிப் பட்டம்பெற்ற ஒருவர் யுனெஸ்கோ நிறுவனத்தால அழைத்துவரப்பட்டு இணைப்பாளராக நியமிக்கப்பட்டார். இவருக்கு ஐந்து சைபர்களில் சம்பளம் வழங்கப்பட்டது.

தொடங்கப்பட்ட காலத்தில் ஊடகவளங்கள் பயிற்சிமையம் இரவு பத்து மணி வரை திறந்திருந்தது. அனைத்துக் கணினிகளிலும் இணைய வசதி இருந்தது. குடாநாட்டுப் பத்திரியையாளர்கள் அனைவரும் தமது தேவைகளுக்கு ஊடக வளங்கள் பயிற்சி மையத்தைப் பயன்படுத்தினர்.

ஹர்த்தால் நாட்களிலும் ஊடகவியலாளர்கள் - ஊடக வளங்கள் பயிற்சி மையத்துக்குச் சென்று தமது நிறுவனங்களுக்கு செய்திகளையும் புகைப்படங்களையும் அனுப்பினர். கொழும்பிலிருந்து வந்த ஊடகவியலாளர்கள் கூட தமது தேவைக்கு ஊடக வளங்கள் பயிற்சிமையத்தைப் பயன்படுத்தினர்.

ஆனால், இப்போது நிலை தலைகீழாகவுள்ளது. ஊடக வளங்கள் பயிற்சி மையத்துக்கான இணையத் தொடர்பு ஆறு மாதங்களுக்கு மேலாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஓரிரு மாதங்கள் ஒரேயொரு கணினிக்கு மட்டும் இணையத் தொடர்பு வழங்கப்பட்டது. பின்னர் அதுவும் துண்டிக் கப்பட்டு மூன்று மாதங்களாகிறது.

தொலைபேசியும் துண்டிக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகிறது. அதுமட்டுமன்றி இப்போதுள்ள சூழ்நிலையில் ஊடக வளங்கள் பயிற்சி மையம் எப்போது திறக்கப்படும் எப்போது மூடப்படும் என்பது யாருக்கும் தெரியாது. சில சமயங்களில் வாசல் கதவுகள் கூடப் பூட்டப்பட்டிருக்கும்.

டென்மார்க் மக்களின் வரிப் பணம் மூன்று கோடி ரூபா விழலுக்கிறைத்த நீர்தானா?

# மீண்டும் ஒரு வெளிநாட்டுப் படை இலங்கைக்குத் தேவையா?



‘இலங்கைக்கு மீண்டும் ஒரு வெளிநாட்டுப்படை தேவையா?’ என்ற தலைப்பில் முன்னாள் இராணுவ அதிகாரி லெப்.கேணல் சுசந்த செனிவிரட்ண ‘லங்கா தீப’ நாளிதழில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்

(நேற்றைய தொடர்ச்சி...)

எவ்வாறாயினும் இந்திய அமைதிப்படையின் கட்டளையிடும் அதிகாரியின் வேண்டுகோளை அடுத்து குமரப்பா ஹாபர் வியூ ஹொட்டலுக்கு செல்ல அனுமதி கிடைத்தது. விடுதலைப் புலிகளின் முழுமையான அனுமதி மற்றும் விருப்பம் என்பன இந்திய அமைதிப்படை வருகைக்காக கிடைத்தமை இதன் மூலம் உறுதியாகிறது.

இவ்வாறு சமாதான நடவடிக்கைகளுக்காக வரும் படைகளுக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் மிகவும் சிக்கலானது. அதேபோன்று பாதுகாப்பற்ற நிலையுமாகும். இந்தக் காரணத்தால், சமாதானத்துக்காக நிறைவேற்றுகின்ற பணிகளும் பலவித பெயர்களில் அறிமுகப்படுத்தப்படுகிறது. சமாதானத்தை நடத்திச் செல்லும் (Peace keeping), சமாதானத்தை உண்டாக்கும் (Peace Making), சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தும் (Peace Restoring) என அழைக்கப்படுகின்றன.

இதன்படி ஏதாவதொரு சமாதானப்படை, ஏதாவதொரு நாட்டில் சமாதானச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது மேலே குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்குப் பெருமளவில் முகம் கொடுக்க நேரிடலாம். இந்திய அமைதிப்படை இங்கு வந்தது சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கே. அதன் போது தோன்றிய சிக்கல்களால் அவர்களுக்கு சமாதானத்தை ஏற்படுத்தவும் நேர்ந்தது. அது வெற்றி பெறாத போது சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகச் சண்டை செய்ய நேர்ந்தது. இது இந்தியப் படைகளுக்கு மாத்திரமல்லாமல் எந்தவொரு சமாதானப்படையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. அதிலுள்ள சிக்கல் தன்மையையே அதற்கான காரணமாகக் காட்டலாம்.

ஏதாவதொரு வெளிநாட்டுப் படை இலங்கைக்கு வருமாயின் அவர்களுக்கு மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்காகச் செல்ல நேர்வதைத் தடுக்க முடியாது. இவ்வாறு வரும் படைகளை மீண்டும் அனுப்புதல் அல்லது பிரச்சினைகள் உக்கிரமடைவதால் வந்த படை திரும்பிச் செல்ல வேண்டிய சந்தர்ப்பமும் உண்டு. அது நிகழ்வது எப்படி?

இந்திய அமைதிப்படை விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தி சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த கட்டத்தில் அப்போதிருந்த அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் , அரசியல் கட்சியான ஜே.வி.பியும் ஏற்படுத்திய அழுத்தங்களால் இந்திய அமைதிப் படை மீண்டும் தாய் நாடு செல்ல நேர்ந்தது. எப்படியோ தற்போதைய நிலைமையின் கீழ் இலங்கைக்கு வரக் கூடிய வெளிநாட்டுப் படை அல்லது அமைதி பேணும் படை எந்த நாடுகள் அடங்கிய படையாக இருக்கும்?

அந்தச் சமாதான நோக்க நடவடிக்கை எந்த விதமான சமாதான செயற்பாடானதாக முடியும்?

இந்த வலயத்தில் அதிகாரமுள்ளது இந்தியாவே. ஆனால், இதற்கு முன் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்து ஏற்படுத்திய அபகீர்த்தியின் பின்னணி மற்றும் விரும்பத்தகாத அனுபவங்களின் மீது அவர்களது ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. ஆனால், ராஜதந்திர ரீதியில் இலங்கை அரசுக்குத் தேவையான உதவியை வழங்குவதற்கு இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால், இந்தியா வரையறைக்குட்பட்ட யுத்த உதவியை வெளிப்படுத்துவதன்மூலம் அவர்களது எல்லைகளுக்குள் நின்று விடுதலைப் புலிகளை யுத்த ரீதியில் கட்டுப்படுத்துவதற்கு அல்லது இலங்கையில் சமாதானம் ஏற்படுத்துவதற்கு அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்குவதை எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் உள்நாட்டுக் கிளர்ச்சிக்கு ஆசிய நாடுகளின் தலையீடு இந்தியாவுக்கு மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் சொற்பமே. அவ்வாறு சொற்பமாக இருப்பதான பிரதான காரணமாக இருப்பது பிராந்தியத்தில் சக்தி மிக்கதான இந்தியா - அதற்கு வெளியே மற்றைய வெளிநாடுகள் தலையிடுவதை அனுமதிக்காது என்பதே.

ஐ.நா அமைதிப்படை அல்லது மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புக்களின் அனுமதியுடனாவது மேற்கத்தைய நாடுகளின் தலையீட்டை இந்தியா அனுமதிக்காது. எனவே, ஐ.நா வின் அனுமதியைப் பெற்ற அமைதிப்படை இந்தியாவின் கருத்தை அறியும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அதன்படி தெரிவது எந்தவொரு நாடும் மத்தியஸ்தத்துக்காக வருவது அந்த நாட்டில் மோதலில் ஈடுபடும் தரப்பினர் மட்டுமன்றி, அந்த நாடு அமைந்துள்ள பிராந்தியத்தின் சக்தி மிக்கவர்களின் ஏதாவதொரு அனுமதியைப் பெற வேண்டும் என்பதே. இல்லையெனில் அந்தப் பிராந்தியத்தில் மேலும் சிக்கல்கள் உண்டாகலாம்.

உலகின் அதி உயர் அதிகாரமுள்ள அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் படைகள் இலங்கைக்குவர முடியுமா? இந்த விடயத்தின் போது வெளிப்படையாக எழும் பிரச்சினை, இந்த இரண்டு நாடுகளிலும் நிலவும் உள்நாட்டு அரசியற்சூழல் தற்போது இந்த இரு நாடுகளிலும் தொடர்புபட்டுள்ள யுத்தக் கிளர்ச்சியை வேறு, வேறாக எடுத்துக் கொண்டு இந்த நாடுகளின் உள்நாட்டு அரசியல் நிலைப்பாட்டில் மிகுந்த அளவில் தீங்கு ஏற்பட்டதைக் காணமுடிகிறது. அதற்காக அந்த நாடுகளின் மக்கள் அனுமதியைப் பெறமுடியுமா என்பது பிரச்சினையுடன் கூடிய ஒன்று. இதற்கு முக்கிய காரணம் இலங்கையில் நிலவுகிற உள்நாட்டுக் கிளர்ச்சி உலக சமாதானத்துக்கு எச்சரிக்கையாக இல்லாமை.

அதேபோன்று பிராந்தியத்தில் அதிகாரம் மிக்கதாக இந்தியா இருக்கும் போது அதனது விருப்பத்தைக் கவனியாது இராணுவத்தை தொடர்புபடுத்துவதன் மூலம் உலக சமாதானத்துக்கு எச்சரிக்கை ஏற்படக்கூடும் என்பதால், அத்துடன் தற்போது இந்த நாடுகளின் படைகளும் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் போரிடுவதன் மூலம் அந்த நாடுகளது மக்க ளின் வெறுப்புக்கு மாத்திரமின்றி உலகின் வெறுப்புக்குக் கூட இரை யாகிப்போயுள்ளது.

இதை விட பாரதூரமான பிரச்சினையாக உள்ளது - எந்த ஒரு தலையீட்டிலும் யுத்த ரீதியான வெற்றியைப் பெறாததன் மூலம் அதனது திறமை இன்மை தெரியவந்தது. விசேடமாக ஒரு நாட்டில் உள்நாட்டு கிளர்ச்சிகளில் தலையிடும்போது யுத்த ரீதியில் வெற்றி பெறுவதற்குள்ள அவகாசம் வரையறைக்கு உட்பட்டதாகும்.

ஏதாவது ஒரு காரணத்தால் மிகப் பெரியளவான படை வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்குச் சமாதானத்தை உருவாக்குவதற்காக வந்தால் என்ன நிகழக் கூடும்? இவ்வாறு சமாதான நலன் காக்கும் படை ஏதாவதொரு நாட்டுக்கு வரும் போது அது ஐ.நாவின் மற்றைய சபைகள் மூலம் நிகழுமாயின் அதற்காக அவசியமானது கடிதக் கோவைகள் இரண்டு உண்டு. இதில் முதலாவது அந்தப் பணிக்காக



பயன்படுத்தப்படும் அதிகாரத்தை வழங்கும் பதிவேடு (Mandate) அதற்காக அந்தப் படையின் பணிகள் (ROLL) அளவு (SIZE) செயற்படும் ரகம் ( For of Operation) என்பன சேர்க்கப்பட வேண்டும். இந்த விடயங்கள் பெரும்பாலான அளவுக்கு அரசின் அரசியல் அதிகாரத்துக்கு, குறிப்பிட்டளவு தூரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.ஜே.வி.பி காண்பிக்கும் விதமாக இறைமைக்கு எச்சரிக்கையாக அமைவது இந்த இடத்தில் தான்.

இரண்டாவது அவ்வாறு சமாதானத்துக்காக அனுப்பப்படும் படைகளின் தராதரங்கள் பற்றி ஏற்படுத்தியுள்ள உடன்பாடு. இந்தக் கடிதங்களில் சமாதானம் பேணும் விலையின் உரிமைகள், சிறப்புரிமைகள், கடமையாற்றுவதற்கான சட்டபூர்வமான அதிகாரம் என்பன அடங்கியிருக்க வேண்டும்.

இது அதிகாரமாக அரசின் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதன்படி சமாதானப்படை ஒரு நாட்டுக்குள் செல்வதானால் ஏற்படக் கூடிய அரசியல் ரீதியான நிர்வாகச் சிக்கல்கள் குறித்து விளங்கிக் கொள்ள முடியும். அதேபோன்று இந்தப் படை வருவதால் மண்ணில் நிகழக் கூடியவைகளையும் அனுமானிப்பது உசிதமானது. இதன்படி வடக்கு - கிழக்கிலுள்ள படையினர் முழுமையாக விலக்கப்படுதல் அல்லது அவர்கள் குறித்த பிரதேசங்கள் மற்றும் இராணுவத்தினரின் விடுதிகளில் மட்டுப்படுத்தும் நிகழ்வுகளுக்கு இடமுண்டு. விடுதலைப்புலிகளுக்கும் அவ்வாறு எல்லையிட இடமுண்டு. அதன்படி அந்தச் சமாதானப் படைகள் தற்போது இலங்கை இராணுவம் பயன்படுத்தும் இடங்கள் அவர்களின் தங்குமிடங்களாகப் பயன்படுத்தப்படும். குறிப்பாக அந்த இராணுவம் தற்போது வடக்கு - கிழக்கில், விடுதலைப் புலிகள் மற்றும் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லைக்கிடையே ( NO Man Zone) இந்தப் படைகள் தங்குவது பெரும்பாலும் நிகழும். அதன்படி மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புகள் புவியியல் ரீதியில் இரு பக்கத்துக்கும் வரையறை செய்வதை எதிர்பார்க்கலாம்.

இதன்படி ஆகாயம் மற்றும் கடல் எல்லையும் குறிப்பிட்டளவு தூரத்துக்கு வரையறை செய்யப்படநேரலாம். அந்த சமாதானப் படையின் அனுசரணையின் கீழ் அவர்களால் விதிக்கப்படுகின்ற போர் நிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகளும், அரசும் கடைப்பிடிக்க வேண்டும்.

எவ்வாறாயினும் இலங்கை அரசு மற்றும் விடுதலைப்புலிகளுக்கிடையே தற்போது போர் நிறுத்த ஒப்பந்தம் செயற்படுத்தப் படுவதால் பயங்கர செயற்பாடுகள் தடவைக்கு தடவை ஏற்பட்டாலும், இரு தரப்பும் சமாதானப் பேச்சைக் கைவிடவில்லை. இது போன்ற நிலையின் கீழ் வெளிநாட்டுப்படைகள் அல்லது சமாதானப்படைகள் இலங்கைக்கு வருவதை தற்போது எதிர்பார்க்க இயலாது.

தமிழில் – நாடோடி

# புலிகளின் இராணுவத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை அரசாங்கம் கடிதம்

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படையை ஏற்கவோ, தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கோ அரசாங்கம் ஒருபோதும் முன்வராது என்று - ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் பெனிடா வோல்டினருக்கும், நோர்வே பிரதமர் ஜோன் ஸ்டோல்டன்போர்க்கிற்கும் அரசாங்கம் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

மகிந்தவின் ஆலோசனையின் பேரில் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தனியான அரசாங்கத்தை அமைக்க தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிடுவது அவர்களின் 7 விடயங்களைக்கொண்ட 6 பக்க ஒஸ்லோ அறிக்கையில் உறுதியாகிறது.

ஜனநாயக அரசாங்கம் என்ற வகையில் விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோதப் போக்குக்கு அரசாங்கத்தால் இணங்கமுடியாது.

அரச பாதுகாப்புப் படைக்குச் சமமாக தமது படைபலத்தையும் கட்டியெழுப்ப விடுதலைப் புலிகள் விடுக்கும் கோரிக்கைக்கு ஜனநாயக அரசு என்ற வகையில் எவ்வாறு இணங்க முடியும் என்று அந்தக் கடிதத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ள பின்லாந்துக்கும் - அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர விளக்கவுள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளுக்குத் தனியான அரசாங்கம் இல்லாததால் அதற்கு இராஜதந்திரத் தகுதி வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கைக்கும் அரசாங்கம் உடன்படாது என்று, நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்முக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் இளைஞர், யுவதி மகியங்கனையில் கைது

கொழும்பு—

மகியங்கனை -மக்குலுகொல்லவில் தமிழ் இளைஞர் ஒருவரும், யுவதியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகநாதன் (வயது 19), மன்னாரைச் சேர்ந்த இரு குழந்தைகளின் தாயாரான அஞ்சலா (வயது 27) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

கைதுசெய்யப்பட்டபோது அந்தப் பெண் வழங்கிய தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்றும், அவரது அடையாள அட்டையும் போலி என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிங்கள இளைஞருடன் தங்களுக்கு இருக்கும் நட்பின் காரணமாகவே அங்கு வந்ததாக அந்த இருவரும் தெரிவித்தனர். மகியங்கனை வீட்டில் ஒரு நாள்தான் தங்கியுள்ளனர். இரண்டாவது நாள் அவர்கள் குறித்து சந்தேகித்த அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது இந்த தமிழ் இளைஞர் தனக்கு உதவியதால் தங்களுக்கிடையில் நல்லதொரு நட்பு நிலவுவதாக சிங்கள இளைஞர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இரு தமிழர்களுடன் அந்த இளைஞரையும் கைது செய்த பொலிஸார் மகியங்கனை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இதனையடுத்து மூவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## போராளி வீரச்சாவு!

கிளிநொச்சி—

வவுனியா - நாவற்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப்.பண்டாரவன்னியன் என்று அழைக்கப்படும் ஒட்டுசுட்டான் கற்சிலைமடுவைச் சேர்ந்த சுப்பிரமணியம் சத்திய சீலன் என்பவரே வீரச்சாவடைந்தவராவார்.

## பேசாலையில் கடற்படையின் வெறியாட்டத்துக்கு இலக்காகிப் படுகாயம் அடைந்த சிலர்!







படங்கள்:- ரொய்ட்டர், ஏபி, ஏ.எவ்.பி.

# இராணுவத்துடன் இணைந்தே கருணாகுழு செயற்படுகிறது!

## புலிகளிடம் பிடிபட்டவர் தெரிவிப்பு



மட்டக்களப்பு—

இராணுவ புலனாய்வுப் பிரிவுடன் இணைந்தே கருணாகுழு தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாக-இலுப்பையடிச் சேனையில் கைதுசெய்யப்பட்ட கருணாகுழு உறுப்பினரான அகிலன் தெரிவித்தார்.

இதுகுறித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆழ ஊடுருவித் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்த கருணாகுழுவைச் சேர்ந்த அகிலன் எனப்படும் கதிர்காமத்தம்பி இதயராசா(வயது25) செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்-

தீவுச்சேனையில் கருணாகுழு முகாமில் நின்ற என்னையும் மற்றொரு உறுப்பினரான சுந்தரலிங்கம் திருநாவுக்கரசு ஆகிய இருவரிடமும் கருணாவின் முக்கிய சகாவான பிள்ளையான் மற்றும் ருத்திரா ஆகிய இருவரும் தொடர்புகொண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சென்று தாக்குதல் நடத்துமாறு கூறினர்.

இந்தத் தாக்குதல் ஏற்பாடுகளை மட்டக்களப்பு இராணுவப் புலனாய்வு முகாமான பற்பொடி கொம்பனியிலுள்ள சுரேஸ் என்பவர் மேற்கொள்வார் எனவும் பிள்ளையான் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து இருவரையும் கருணாகுழுவினர் வான் ஒன்றில் ஏற்றிவந்து மட்டக்களப்பு பற்பொடி கொம்பனியில் விட்டனர். இதையடுத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சுரேஸ் எங்கள் இருவரையும் பவள் வாகனத்தில் மட்டக்களப்பு - ஆறுமுகத்தான் குடியிருப்புக்கு ஏற்றிவந்தனர்.

பின்னர் இரவு 7.30 மணியளவில் தோணி ஒன்றில் பன்குடா வெளியூடாக வந்து இலுப்பையடிச்சேனையில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தும் முயற்சியில் ஈடுபட்டதாக அவர் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி, குறிப்பிட்ட இலக்கு என்று எவையும் அல்ல. பொதுமக்கள் வாகனங்கள் வந்தாலும் தாக்குதல் நடத்துமாறு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தம்மிடம் கூறியதாகவும் ஊடகவியலாளர்களிடம் கருணாகுழுவைச் சேர்ந்த அகிலன் தெரிவித்தார்.

அதேநேரம், விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடவடிக்கையை முறியடித்ததைத் தொடர்ந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கருணாகுழுவின் மற்றைய உறுப்பினரான சுந்தரலிங்கம் திருநாவுக்கரசு காலில் சூடுபட்டு விழ அவரையும் துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு பன்குடாவெளி வாவி ஓரமாகவுள்ள பற்றைக்காட்டுக்குள் சென்று மறைந்து - பிள்ளையானுடன் தொலைபேசியூடாக தொடர்புகொண்டு எம்மைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கூறினேன்.

பின்னர் பிள்ளையான் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சுரேஸிடம் தொடர்பை ஏற்படுத்துமாறு கூறினார். இதற்கேற்ப தொடர்பை ஏற்படுத்தியபோது பன்குடாவெளி பகுதிக்கு ஆட்லறி தாக்குதல் நடத்துகிறோம். நீங்கள் வாவியைக் கடந்து வாருங்கள் என சுரேஸ் தெரிவித்தார்.

இதற்கு முடியாது என நாம் தெரிவித்தபோது - எங்கள் ஆட்கள் தோணியில் வந்து உங்களை கூட்டி வருவார்கள் என சுரேஸ் தெரிவித்தார்.

பின்னர் விடுதலைப் புலிகளால் நாங்கள் மறைந்திருந்த காட்டுப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கையின் போது இருவரும் கைது செய்யப்பட்டோம் .

அதேவேளை, விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலையில் ஊடுருவி போராளி பார்த்தீபன் மீது மேற்கொண்ட தாக்குதலும் தன்னால் மேற்கொள்ளப்பட்டது எனவும் அகிலன் தெரிவித்தார்





பழுனுகமவில் நேற்று மீட்கப்பட்ட சுழியோடும் சாதனங்களைச் சோதனையிடும் படையினர்.

படங்கள்:- ரொய்ட்டர், ஏபி, ஏ.எவ்.பி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முகமாலையில் மீட்கப்பட்ட சடலம் பருத்தித்துறை இளைஞருடையது!

யாழ்ப்பாணம் —

முகமாலை சூனியப்பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞரின் சடலம் நேற்று அவரது தாயாரால் அடையாளம் காணப்பட்டது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 16 வயதுடைய சிறிரவீந்திரராஜா தினேஸ்வரன் என்பரது சடலமே அடையாளம் காணப்பட்டது.

கடந்த புதன்கிழமை முகமாலை சூனியப்பிரதேசத்தில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட மேற்படி சடலத்தை யாழ்.போதனா வைத்திய சாலையில் அவரது தாயார் அடையாளம் காட்டினார்.

மேற்படி இளைஞர் இரு வாரங்களுக்கு முன்னர் காணாமற்போயிருந்ததாகவும், இது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றிடம் முறைப்பாடு செய்ததாகவும் கூறப்படுகிறது.

## வத்தளை கடற்பகுதியில்...

கரைசேர்ந்தனர்.

சுழியோடும் சாதனங்களுடன் நீந்தி வந்தவர்களைக் கண்ட அந்தப் பகுதி மீனவர்கள் சந்தேகம் கொண்டு விசாரிக்க முயன்றபோது - தாம் வந்த படகு விபத்துக்குள்ளாகியதாகவும், புத்தளத்தில் இருந்து வருவதாகவும் தெரிவித்தனர். இதனால் சந்தேகம் கொண்ட மீனவர்கள் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

அப்போது அங்கு வந்த பொலிஸார் குறித்த இளைஞர்களிடம் விசாரணை நடத்த முற்பட்டபோது அவர்களில் ஒருவர் சயனைட் அருந்தினார். அப்போது கடலில் ஒரு பாரிய வெடிச் சத்தம் நீருக்கடியில் கேட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால் 50 மீற்றர் அளவுக்கு நீர் மேலெழுந்ததாகவும் கூறப்படுகிறது. அப்போது சற்றுநேரத்தில் மற்றவரும் சயனைட் அருந்த மற்றொரு குண்டுவெடிப்பு கடலில் இடம்பெற்றது.

பொலிஸார் உடனடியாக சயனைட் உட்கொண்ட இருவரையும் ராகம வைத்தியசாலைக்கு கொண்டு சென்று ஆபத்தான நிலையில் அனுமதித்தனர்.

இதேவேளை, மூன்றாவது நபர் பமுனுகம பகுதிக்குள் வேகமாக ஓடித் தப்பிவிட்டார். இதையடுத்து நேற்றுக் காலை அந்தப் பகுதியில் பெருமளவு படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்போது தப்பியோடி நபர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை, இவர்களை இறக்கிவிட்டு தப்பிச்சென்றதாக் கூறப்படும் படகை கடற்படையினர் துரத்திச்சென்று கைப்பற்றினர்.

இந்தப் படகில் இருந்த இருவரும் கைதுசெய்யப்பட்டனர். படகு கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் இருந்து ஏழு சுழியோடும் சாதனங்கள் கைப்பற்றப்பட்டன. மேலும் இவர்களிடம் இருந்து ஐந்து பாஸ்போட், செல்போன் உள்ளிட்ட பல பொருட்கள் மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புலிகள் தற்கொலைத் தாக்குதலுக்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்தை தாக்குதவதற்கான முயற்சியாக இருக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் மேற்கு கடற்பிராந்தியத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## பேசாலை கடலில் சமர்...

சாதனங்கள் 02 மற்றும் குண்டு கள், ரவைகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, நேற்றிரவு பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் - பேசாலை பொலிஸ் நிலையம் மற்றும் தலைமன்னார் கடற்படைத்தளம் ஆகியவற்றின் மீது தரை மற்றும் கடல்வழியாக புலிகள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

12 படகுகளில் வந்த கடற்புலிகள் கடற்படைப் படகுகள் மீது தாக்குதலை நடத்தியதாகவும் - இதன்போது கடற்புலிகளின் 8 படகுகளை தாம் மூழ்கடித்ததாகவும், 3 படகுகள் சேதங்களுடன் தப்பிச் சென்றதாகவும் கூறியுள்ள படைத்தரப்பு - 30 புலிகள் வரை உயிரிழந்ததாகவும் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தில் 6 கடற்படையினர் கொல்லப்பட்டதுடன், மேலும் 11 பேர் காணாமல் போயுள்ளதாகவும், ஒருவர் காயமுற்றதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால், கடற்படை பேச்சாளர் காயமுற்ற கடற்படையினரின் எண்ணிக்கை 8 எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

கொல்லப்பட்ட 3 கடற்படையினரின் சடலங்களே இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு மணிநேரம் நீடித்த மோதலின்போது விமானப் படையின் எம். ஐ 24 தாக்குதல் ஹெலி உதவிக்கு அழைக்கப்பட்ட போதும், அது தாக்குதலில் ஈடுபடவில்லை என்று கூறப்படுகிறது.

காணாமற்போன 11 கடற்படையினரும் உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுவதால் - இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட கடற்படையினரின் தொகை 14 என கூறப்படுகிறது.

இதேவேளை, இந்தத்தொகை அதிகமெனவும், 18 கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும் மற்றொரு தகவல் தெரிவித்தது.

## கடற்படையின் தாக்குத...

ஆலயத்தினுள் இரண்டு கிரனேட்களை வீசினர்.

அத்துடன், ஆலயத்திலிருந்த மக்கள் மீது சரமாரியான துப்பாக்கிச் சூடும் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் தனது பேரப்பிள்ளையின் திருமணத்துக்காக வந்திருந்த பேசாலையைச் சேர்ந்த மனுவேல் இராசம்மா லீமா (வயது 70) என்ற வயோதிப மாது தலை சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 45 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களை அம்புலன்ஸில் மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை இருந்ததால் -

தனியார் வாகனங்களில் காயமடைந்தவர்களை கொண்டு செல்ல முயன்றபோது கடற்படையினர் அவற்றைத் தடுத்து வைத்திருந்தனர். சம்பவ இடத்துக்கு வந்த கடற்படையினர் தமது வாகனங்களை வீதியின் நடுவே நிறுத்தி போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின்போது வெற்றிநாயகி மாதாவின் திருச்சொரூபத்தின் மீதும் துப்பாக்கிச் சன்னங்கள் தாக்கியதுடன் - அதன் கண்ணாடிகளும் உடைந்தன. தாக்குதலின் பின்னர் வெற்றிநாயகி ஆலயம் இரத்த வெள்ளமாகக் காட்சியளித்தது.

இதேவேளை - தாக்குதல் நடத்தப்பட்ட வெற்றிநாயகி தேவாலயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் முகாமிட்டு மக்களுக்கான உதவிகளை வழங்கிவருகின்றனர்.

# மேற்கு கடல் பிராந்தியத்தில் கண்ணிவெடிகள் விதைப்பு!

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு —

மேற்கு கடற்பிராந்தியத்தில் கடற்படைப் படகுகளை இலக்குவைத்து புலிகள் கடற்கண்ணிவெடிகளை விதைத்திருப்பதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் பேசுகையில் -

வத்தளை பமுனுகமவில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று பமுனுகமவில் கைது செய்யப்பட்ட ஐந்து விடுதலைப் புலிகளில் உயர்மட்ட கடற்புலிகளும் இருப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. கொழும்புத் துறைமுகத்தை இலக்குவைத்து தாக்குதல்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

பயங்கரவாதிகளின் நோக்கங்களை முறியடிப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். பயங்கரவாதிகளைப் பற்றி தகவல்கள் வழங்குபவர்களுக்கு பணப் பரிசில்களும் வழங்கப்படும்.

அதேவேளை கற்பிட்டி தொடக்கம் கொழும்பு வரையான கடல்பகுதியில் புலிகளின் கடற்படைப் படகுகளைத் தகர்க்கும் நோக்குடன் கடலில் குண்டுகளை மிதக்கவிட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கண்ணிவெடியில் சிப்பாய் காயம்!

யாழ்ப்பாணம் —

தென்மராட்சி முன்னரங்க நிலைப் பகுதியிலுள்ள பொன்னாறு என்ற இடத்தில் கண்ணிவெடியில் சிக்கிய இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமுற்ற இராணுவச் சிப்பாய் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - சந்திவெளியில் நேற்றுக்காலை குடும்பஸ்தர் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 11.05 மணியளவில் படையினர் மீது கைக்குண்டு வீச முற்பட்டபோதே இவர் சுடப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஆனால், சுட்டுக்கொல்லப்பட்டவர் காத்தமுத்து இராசநாயகம் என்ற 43 வயதான குடும்பஸ்தர் என அவரது தாயார் அடையாளம் காட்டியுள்ளார்.

இவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

## ஈ.பி.டி.பி முகாமுக்குள் கிளைமோர் மீட்பு!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் ஒருவரை இலக்கு வைத்து முகாமுக்குள் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு ஒன்று படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

சிவா என்ற வாழைச்சேனைப் பகுதி ஈ.பி.டி.பி. பொறுப்பாளரை இலக்குவைத்து அவரது படுக்கை அறைக்குள் இந்தக் கிளைமோர் பொருத்தப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தக் கிளைமோர் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

இதேவேளை - இந்தக் கிளைமோரை பொருத்தியதாகச் சந்தேகிக்கப்படும் இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

## 2 அதிசக்தி வாய்ந்த குண்டுகள் வென்னப்புவவில் கண்டுபிடிப்பு

கொழும்பு —

புத்தளம் - வென்னப்புவ பகுதியில் கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த அதிசக்தி வாய்ந்த இரண்டு குண்டுகளை புத்தளம் பொலிஸார் நேற்றுக் காலை கண்டுபிடித்தனர்.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவல் மூலம் மீட்கப்பட்ட இந்த குண்டுகள் ஒவ்வொன்றும் 35 கிலோ எடை கொண்டதாகும்.

அதிசக்தி வாய்ந்த சி 4 பிளாஸ்ரிக் வெடிமருந்து பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட இந்தக் குண்டுகள் பைபர் கவசமிடப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் இத்தகையதொரு குண்டு இலங்கையில் கண்டெடுக்கப்படவில்லை என்று அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினருக்கு எதிரான தாக்குதலுக்காகவே இந்தக் குண்டுகள் கொண்டுவரப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

## விமானத்...

இத்தகைய கொடூரமான தாக்குதலுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பில்லை என்று மீண்டும் கூறுகிறோம்.

விடுதலைப்புலிகளை சர்வதேச சமூகத்திடமிருந்து தனிமைப்படுத்தும் சக்திகள் குறித்து நாம் அவதானமாக உள்ளோம். அமைதி முயற்சிகளை எதிர்க்கும் அந்த சக்திகளே பொதுமக்கள் மீதான தாக்குதலை நடத்தி நிலைமையை மேலும் கொழுந்து விட்டு எரியச்செய்துள்ளனர். ஒரு முழு அளவிலான யுத்தத்தை தூண்டியுள்ளனர்.

ஒஸ்லோவில் அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்ளாமை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தடைக்கு பின்னைய சூழ்நிலையால் இருதரப்பு சமநிலை பாதிக்கப்படுவதால் அது இலங்கையில் ஒரு யுத்தத்தை நோக்கியுள்ளது.

விமானக்குண்டு வீச்சுக்கள் மூலம் பொதுமக்கள் குடியிருப்பை பொறுப்பற்ற முறையில் தாக்கியமைக்கு அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் பதில் தாக்குதல் நடத்த நேரிடும் என்ற தலைமைப்பீடத்தின் கடும் எச்சரிக்கையை அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளோம் என சு.ப தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

## வெடிபொரு...

அங்குள்ள மீனவரிடம் கேட் டார்.

பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்ற மீனவர்கள் சிவில் உடையில் பொலிஸாரை அழைத்து வந்து குறித்த நபரை கைதுசெய்ததுடன், படகையும் கைப்பற்றினர். மேற்படி படகில் வெடிபொருட்கள் இருந்ததாகவும் - வேறு ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கடற்படைப்...

என கருதப்படுகிறது.

தாக்குதல் சம்பவங்கள் எதிலும் இந்தப் படகு சிக்கவில்லை என கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

## ஷெல் தாக்குதலில் இருவர் காயம்!

மன்னார் —

மன்னார் இலுப்பைக்கடவை பகுதியை நோக்கி படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் இரு பொதுமக்கள் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து நடத்திய தாக்குதலிலேயே இவர்கள் இருவரும் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த இருவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பேசாலையில்...

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை பேசாலைக்குச் சென்றபோது படையினர் அவரைத் தொடர்ந்து செல்ல அனுமதிக்கவில்லை. நீண்ட இழுபறியின் பின் அவர் பேசாலை செல்ல அனுமதிக்கப்பட்டார். பேசாலைக்கு அவர் சென்றபோது - அங்கு மன்னார் கடற்படைத் தளபதி இருந்ததாகவும் தற்போது அங்கு நிலைகொண்டுள்ள கடற்படையினரை அகற்றி, வேறு படையினரை நிறுத்துவதாக கடற்படை அதிகாரி தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து பேசாலைக்குச் செல்ல முயன்ற மன்னார் ஆயர், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் படையினரால் கரிசல் கிராமத்தில் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

O/L ☑ A/L ☑ Next ?
தொழில்சார் கற்கைநெறிகளே
CIMA, aat, CMA, CAT
விரிவுரைகள் ஆரம்பம் :
25.06.2006 - 10.00 a.m
மேலதிக விபரங்களுக்கு :
CAREER.COM
Career.Com.Institute
#167, 1st Cross street, Jaffna.
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
T.P : 0773039448, 0773151510, 0776155968
[C/5408]
அலுவலக நேரம் தினமும் 09.00am - 01.00 pm

Fast Track @ AIMS
1. Microsoft Office-2003
- Introducation to Windows Xp
- Word
- Excel
- Access
- Assignment
- Power Point Presentation
2. Computer Hardware
- Introducation to Hardware
- Identification of Parts
- Assembling & Installation
- Setup & Configeration
- O/S & Software Instalautation
- Trouble shooting Techniques
3. Graphic Designing & Publishing
- Introducation to DTP
- PageMaker
- Photoshop
- CorelDraw & publishing Techniques
- Project work
15 நாட்கள் மட்டுமே
Starts on
Batch -I: 18.06.2006 காலை
Batch -II: 21.06.2006 9.00 மணி
மேலதிக விபரங்களுக்கு, இயக்குனர், #118 பலாலிவீதி, திருநெல்வேலி (தபால்பெட்டி சந்தி அருகில்)
AIMS Your Training Partner
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Center for FOSS & LAMP

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.